கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-௧௩.] ராக்ஷஸ ஐப்பசி [பகுதி-௧௨.

Vol. XIII. October—November, 1915. No. 12.

*அசோகனது ஆக்ஞாபத்திரங்கள்.

[அசோகனது ஆக்ஞாபத்திரங்கள் என்ற மகுடத்தின்கீழ்க் கல்கத்தாநகரில், கியாதிவானும் சாஸ்திரபரிசீலனையிலேயே காலத்தைச் செலுத்துபவரும், இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்போர்டுசர்வகலாசாலையிற் சிரேஷ்டவித்யாபட்டம் (M. A.) பெற்றவரும், பாரிஸ்டர்பரீக்ஷை கொடுத்தவருமான மிஸ்டர் K. P. ஜேயஸ்வால்அவர்கள் M. A. (Oxon) Barrister-at-law. தமது ஆராய்ச்சியாற்செய்த மொழிபெயர்ப்புடன் மாடர்ன்ரிவியூசஞ்சிகையிற்றோன்றியதை, தமிழறிற்குப் பெரிதும்பயன்படுமென்றுகருதி யீண்டுத்தருகின்றேன்.]

ஈண்டு எழுதப்பெறும் மொழிபெயர்ப்பானது இதுகாறுஞ்செய்யப் பட்டவைகளினும் மேலானதாயிருக்குமென்று கருதப்படுகிறது.

இதுவரையில் அசோகமகாராஜனதுசாஸனங்கள் எழுதப்பட்டபடியே வெளிப்போந்ததில்லையாதலால், அவைகளை ஒருமாசிகசஞ்சிகை மூலமாக, அசோகமகாராஜனது ஜனசந்ததியாருக்கு தொடக்கமாகக்கூறுகிறேன். அசோகமகாராஜன் அக்காலத்து லங்காத்வீபமுதல் ஆப்கானிஸ்தானம்வரையுள்ளஜனங்களா லறியப்பட்டபாஷையை யுபயோகித்துவந்தார். இப்பொழுது இங்கு எழுதப்படும்பாஷையும் சகலராலும் அறியப்பட்டதே. (தேவநாகரியில் அச்சிடப்பட்டிருக்கிறது.)

* இதிலுள்ள சிலவிஷயங்களும் சாசனங்களின் சுத்தபாடமும் நன்கு விளங்காவிடினும் மிகப்பழமைப்பற்றியதாயிருப்பதால் நிருபநேயர் திருத்தியனுப்பியபடியே பதிக்கப்பெற்றிருக்கிறது. ப—ர்.

*

இந்த ஆக்ஞாபத்திரத்திற்கண்ட இடம் தெற்கில் மைசூரும் வடபால் பாரசீகராஜ்ய எல்லையுமுடையதாயினும், ஆக்ஞாபத்திரத்திற் காணப்படும் விடயங்கள் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய மூன்று கண்டங்களிலும் செல்லத்தக்கன. அசோக அரசனது சாஸனங்களிற் கண்டபடி, அந்தியகவின் ராச்சியமான சிரியாநாட்டிலும், மேஸிடோனியாவிலும், எகிப்து, ஸைரனிலும் வைத்தியசாலைகள் மனிதருக்கும் மிருகங்கட்கும் உபயோகமாகும்படி ஏற்படுத்தியதோடு, மதவிஷயங்களைப் பற்றிப் பிரவசனஞ்செய்யவும் ஏற்பாடுசெய்திருந்தார்.

முதல்வகுப்பு.

மலைகளில்வெட்டப்பட்ட அசோகனது 13, 14-ம்வருஷத்துத் தர்மத்தைப்பற்றியசாஸனபத்திரங்கள்.

இந்தவகுப்புச்சாஸனங்களை ஐரோப்பிய பூர்வீகஆராய்ச்சியாளர் மலைவேட்டுக்கள்(Rock Edicts)என்பர். இவைகள் அசோகமகாராஜனால் "ஸிலாஃபலகா" (சிலாபலகா)என்று சொல்லப்படுகின்றன. அவை 14 பாகமாகப்பிரிக்கப்பட்டு ஒவ்வொருபாகமும் தனித்தனி ஆரம்பித்து எழுதப்பட்டிருக்கின்றன. முற்றுப்புள்ளிகளும் அரைப்புள்ளிகளும் இடைவெளியிலாசத்தாற்காட்டப்பட்டிருக்கின்றன. எல்லைப்புறத்தில் இரண்டுஇடத்தில் இந்தச்சாஸனங்கள் காணப்படுகின்றன. ஒன்று பெஷாவருக்கு 40 மைல் வடகிழக்கில் கபுர்தகிரி என்னுமூரிலும், மற்றொன்று எல்லைப்பிரதேசத்தில் ஆபட்டபாத்(Abottabad)என்னும்நகருக்கு 50 மைல்வடக்கிலுள்ள மானசாரம்என்ற ஊரிலும் தென்படுகின்றன. இவை கரோஷ்டி என்றபாஷையில் வெட்டப்பட்டிருக்கின்றன. இப்பாஷை பாணினிபகவான்காலத்திற் பாரசீகர்களால் அந்தப்பிராந்தியங்களிற் கொண்டுவரப்பட்டது. மற்றவை, தேவநாகரி, வங்காளி, தமிழ்முதலிய எழுத்துக்கட்கு மூலஎழுத்தான பிராமியெழுத்திற் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இவை காணப்படும்பிராந்தியங்கள் (1) யமுனையும் டான்ஸ் என்றநதிகளும் சங்கமமாகும் மஸ்ஸோரி என்றஊருக்கு 15 மைல்தூரத்திலுள்ள கலாஸி (2) ஸோபாரா (சூரப்பாரகா) அந்நாளில் பம்பாய் போல்வது; சிரியாநாட்டிற்குச்செல்லக் கப்பலேறுமிடம் (3) அசோகனதுகாலத்தில் மேல்நாட்டிற்குப் பிரதானநகராகிய கிர்நார் (4) தவுலி (புராதனதோஷாலி) புவனேசுவரமென்னும் புரிக்ஷேத்திரத்திற்கு 7 மைல் வடபுறமுள்ளது (5) கஞ்சம்ஜில்லாவிலுள்ள ஜோகார் என்னும் இடங்கள்.

முதலாவது சாஸநம்

𑌇𑌯𑌂 𑌧𑌮𑍍𑌮𑌲𑌿𑌪𑍀 𑌦𑍇𑌵𑌾𑌨𑌂-𑌪𑍍𑌰𑌿𑌯𑍇𑌨, 𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌸𑌿𑌨𑌾 𑌰𑌾𑌜𑌾 𑌲𑍇𑌖𑌾𑌪𑌿𑌤𑌾. 𑌇𑌧 𑌨 𑌕𑌿𑌂𑌚𑌿 𑌜𑍀𑌵𑌂 𑌆𑌰𑌭𑌿𑌤𑍍𑌪𑌾 𑌪𑍍𑌰𑌜𑍂𑌹𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 𑌨 𑌚 𑌸𑌮𑌾𑌜𑍋 𑌕𑌤𑌵𑍍𑌯𑍋। 𑌬𑌹𑍁𑌕𑌂 𑌹𑌿 𑌦𑍋𑌸𑌂 𑌸𑌮𑌾𑌜𑌮𑍍𑌹𑌿 𑌪𑌸𑌤𑌿 𑌦𑍇𑌵𑌾𑌨𑌂-𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌸𑌿 𑌰𑌾𑌜𑌾 । 𑌅𑌸𑍍𑌤𑌿 𑌪𑌿 𑌤𑍁 𑌏𑌕𑌚𑌾 𑌸𑌮𑌾𑌜𑌾 𑌸𑌾𑌧𑍁𑌮𑌤𑌾 𑌦𑍇𑌵𑌾𑌨𑌂-𑌪𑍍𑌰𑌿𑌯𑌸 𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌸𑌿𑌨𑍋 𑌰𑌾𑌞𑍋 𑌪𑍁𑌰𑌾 𑌮𑌹𑌾𑌨𑌸𑌮𑍍𑌹𑌿 𑌦𑍇𑌵𑌾𑌨𑌂-𑌪𑍍𑌰𑌿𑌯𑌸 𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌸𑌿𑌨𑍋 𑌰𑌾𑌞𑍋 𑌅𑌨𑍁𑌦𑌿𑌵𑌸𑌂 𑌬𑌹𑍂𑌨𑌿 𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑌤𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌨𑌿 𑌆𑌰𑌭𑌿𑌸𑍁 𑌸𑍂𑌪𑌾𑌥𑌾𑌯 𑌸𑍇 𑌅𑌜 𑌯𑌦𑌾 𑌅𑌯𑌂 𑌧𑌮𑍍𑌮𑌲𑌿𑌪𑍀 𑌲𑌿𑌖𑌿𑌤𑌾 𑌤𑍀 𑌏𑌵 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌆𑌰𑌭𑌰𑍇 𑌸𑍂𑌪𑌾𑌥𑌾𑌯 𑌦𑍍𑌵𑍋 𑌮𑍋𑌰𑌾 (1) 𑌏𑌕𑍋 𑌮𑌗𑍋 𑌸𑍋 𑌪𑌿 𑌮𑌗𑍋 𑌨 𑌧𑍍𑌰𑍁𑌵𑍋। 𑌏𑌤𑍇 𑌪𑌿 𑌤𑍍𑌰𑍀 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾 𑌪𑌛𑌾 𑌨 𑌆𑌰𑌭𑌿𑌸𑌰𑍇 ।

ஆங்கிலத்தின் தமிழ்மொழிபெயர்ப்பு.

தேவர்களுக்குப்பிரியமானவனும், அரசனுமாகிய பிரியதர்சியின் பஹிரங்கபத்திரம்:—இனி யாதொருபிராணியும் வதைசெய்யப்படவாவது அக்நிக்குப்பலிகொடுக்கப்படவாவது கூடாது. தேவர்கட்குப் பிரியமானவனும், அரசனுமாகிய பிரியதரிசி, சமாஜங்களில் அதிக தீய வழக்கங்களைக்காண்பதால் இனி சமாஜங்கள்கூடக்கூடாது. ஆயினும், வாதப்பிரதிவாதமற்றகூட்டங்களைப்பற்றி மதிப்புண்டு. முன்னாளில் தேவர்கட்குப்பிரியமாகிய அரசனாகிய பிரியதரிசியின் அட்டிலில், நூறு, ஆயிரக்கணக்கானபிராணிகள் போஜனத்திற்காக வதைக்கப்பட்டன. அதன்பொருட்டு, இந்தத்தர்மசாசனம் எழுதுங்காலத்தில் இரண்டு மயில்களும், ஒருமானுந்தவிர மற்றவை வதைசெய்யப்படுவதில்லை. மான்கூட ஏகதேசமே. இனி அவைகூட வதைக்கப்படமாட்டா.

---

(1) கபுர்தகிரி, மானசாரம் கல்வெட்டுக்களில் 𑌦𑍍𑌵𑍋 𑌏𑌕𑍋 என்றபதங்கட்குப்பின் 2, 1, என்ற எண்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. பிரியதரிசியென்பது அசோகமகாராஜனின் மற்றொருபெயரெனத் தீபவம்சம்கூறும். வின்சன்டு ஸ்மித் துரை அருணிறைந்தபெருமான் (Gracious Majesty)என்றுகூறுவது முத்ராராக்ஷஸத்தில் 𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌰𑍍𑌶𑌨 என்ற பதத்தைக்கொண்டுபோலும். ஆங்கு அது பெயருரிச்சொல்லாகப் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. 𑌸𑍂𑌪𑌾𑌥𑌾𑌯: கறிகள் என்றபொருளுடையதாயினும் அது போஜனமெனக்கொண்டேன்.

II-வது சாஸனம்

𑀲𑀭𑁆𑀯𑀢 𑀯𑀺𑀚𑀺𑀢𑀫𑁆𑀳𑀺 𑀤𑁂𑀯𑀸𑀦𑀁𑀧𑁆𑀭𑀺𑀬𑀲 𑀧𑁆𑀭𑀺𑀬𑀤𑀲𑀺𑀦𑁄 𑀭𑀸𑀜𑁄 𑀏𑀯𑀫𑀧𑀺 𑀧𑁆𑀭𑀘𑀁𑀢𑁂𑀲𑀼 𑀬𑀣𑀸 𑀘𑁄𑀟𑀸, 𑀧𑀸𑀟𑀸, 𑀲𑀢𑀺𑀬𑀧𑀼𑀢𑁄 𑀓𑁂𑀢𑀮𑀧𑀼𑀢𑁄 𑀆 𑀢𑀁𑀩𑀧𑀁𑀡𑀻 𑀅𑀁𑀢𑀺𑀬𑀓𑁄 𑀬𑁄𑀦𑀭𑀸𑀚𑀸 𑀬𑁂 𑀯𑀸 𑀧𑀺 𑀢𑀲 𑀅𑀁𑀢𑀺𑀬𑀓𑀲 𑀲𑀸𑀫𑀻𑀧𑀁 𑀭𑀸𑀚𑀸𑀦𑁄 𑀲𑀯𑀢𑁆𑀭 𑀤𑁂𑀯𑀸𑀦𑀁𑀧𑁆𑀭𑀺𑀬𑀲 𑀧𑁆𑀭𑀺𑀬𑀤𑀲𑀺𑀦𑁄 𑀭𑀸𑀜𑁄 𑀤𑁆𑀯𑁂 𑀘𑀺𑀓𑀻𑀙𑀸 𑀓𑀢𑀸 𑀫𑀦𑀼𑀲𑀘𑀺𑀓𑀻𑀙𑀸 𑀘 𑀧𑀲𑀼𑀘𑀺𑀓𑀻𑀙𑀸 𑀘 𑀑𑀲𑀼𑀥𑀸𑀦𑀺 𑀘 𑀬𑀸𑀦𑀺 𑀫𑀦𑀼𑀲𑁄𑀧𑀕𑀸𑀦𑀺 𑀘 𑀧𑀲𑁄𑀧𑀕𑀸𑀦𑀺 𑀘 𑀬𑀢 𑀬𑀢𑁆𑀭 𑀦𑀸𑀲𑁆𑀢𑀺 𑀲𑀭𑁆𑀯𑀢𑁆𑀭𑀸 𑀳𑀸𑀭𑀸𑀧𑀺𑀢𑀸𑀦𑀺 𑀘 𑀭𑁄𑀧𑀸𑀧𑀺𑀢𑀸𑀦𑀺 𑀘 𑀫𑀽𑀮𑀸𑀦𑀺 𑀘 𑀨𑀮𑀸𑀦𑀺 𑀘 𑀬𑀢 𑀬𑀢𑁆𑀭 𑀦𑀸𑀲𑁆𑀢𑀺 𑀲𑀭𑁆𑀯𑀢𑁆𑀭 𑀳𑀸𑀭𑀸𑀧𑀺𑀢𑀸𑀦𑀺 𑀘 𑀭𑁄𑀧𑀸𑀧𑀺𑀢𑀸𑀦𑀺 𑀘 (2) 𑀧𑀣𑁂𑀲𑀼 𑀓𑀽𑀧𑀸 𑀘 𑀔𑀸𑀦𑀸𑀧𑀺𑀢𑀸 𑀯𑁆𑀭𑀙𑀸 𑀘 𑀭𑁄𑀧𑀸𑀧𑀺𑀢𑀸 𑀧𑀭𑀺𑀪𑁄𑀕𑀸𑀬 𑀧𑀲𑀼𑀫𑀦𑀼𑀲𑀸𑀦𑀁.

தமிழ்

தேவர்கட்குப்பிரியமானவரசனுகிய பிரியதரிசியின்சக்கிராதிபத்தியத்திலும் அதன் எல்லைப்புறங்களிலும் உதாரணமாக, சோழ, பாண்டிய, சத்தியபுத்திர, கேரளபுத்திர, லங்காத்வீபம்வரைக்கும், கிரேக்க அரசனுகிய அந்தியோகாவின்ராச்சியத்தும்,அந்த அந்தியோகஸுக்குப் பக்கத்துள்ள இராச்சியங்களிலும், எல்லாஇடங்களிலும், தேவர்கட்குப் பிரியமாகிய அரசனுன பிரியதரிசி இரண்டுவிதமான சிகிச்சாசாலைகள்—மனிதர்கட்கொன்றும் மிருகங்கட்கொன்றும் ஏற்படுத்தியிருக்கின்ருர். அவ்விடங்களிலெல்லாம் மனிதருக்கும் ஜீவஜந்துக்கட்கும் பிரயோஜனமுள்ள ஓஷதிகளும் பயிர்செய்யப்பட்டிருக்கின்றன. சாலைகளிற் கிணறுகள் தோண்டப்பட்டதோடு நிழலைத்தரும் விருக்ஷங்களும் மனிதருக்கும் மிருகங்கட்கும்பிரயோஜனமாகப் பயிரிடப்பட்டிருக்கின்றன.

(மிஸ்டர் ஜேயஸ்வாலவர்கள் குறிப்பு.)

சோழர்..........சோழர்கள் தெற்கிலுள்ளவர்கள். ராஜநகரமான உறையூர் உரகபுரம் என மகாகவி காளிதாசனால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. சோழதேசம் புத்தர்காலத்திலேயே வடநாட்டில் வழங்கப்பட்டிருக்கிறது. பாணினிசூத்திரத்திற் சோழநாட்டுவஸ்திரம்

---

(2) கலிங்கத்துப்பிரதியில் 𑀉𑀤𑀧𑀸𑀦𑀸𑀦𑀺 என்றுகூட்டியும், கபுர்தகிரி வெட்டில் 𑀧𑀣𑁂𑀲𑀼 என்றாவது 𑀓𑀽𑀧𑀸 என்றாவது காணப்படவுமில்லை.

சொல்லப்பட்டிருக்கிறது. அசோகன்காலத்தில் லங்கையென்றுபொருள்படும் தாமிரபர்ணி பாண்டியநாட்டிலோடுகிறது. அர்த்தசாஸ்திர ஆசிரியர் பாண்டியர்களது முத்துச்சலாபத்துறைகளையறிவர். மகாஸ்தனிஸ் பாண்டியர்களைப்பற்றிப் பாடலிபுத்திரத்திற் கேட்டதுண்டு.

சதீயபுத்ரர்:—மிகப்புராதனமான ஆசிரியரின்கருத்துப்படி புத்திரர் என்பது அந்நாட்டு அரசருக்கிடப்பட்டதொரு பட்டமாகும். சதீயர்களது அரசனுகலாம். ஒருகால், குடிகளால்தெரிந்தெடுக்கப்பட்டவனுகவுமிருக்கலாம். இவர்கள் ஐதிரேயபிராம்மணத்திற்கூறிய சத்வத்துக்களே. இவர்களதுராச்சியம் தெற்கிலிருந்ததென்றும், போஜ்யரென்ற பிரஜாநாயகமாகவிருந்ததென்றுந்தெரிகிறது. மகாபாரதத்திற் கூறப்பட்டபோஜர்கள், அபராந்ததேசத்திலுள்ள அந்தகர். விருஷ்ணிகளைப்போன்ற ஒரு கூட்டத்தாரெனஅறியப்படுகிறது. இந்தக்குலத்தாரின்பேர் மகாபாரதத்தில் **சத்யகி** என்னும் பிரஜாநாயகன்பெயரால் நிலைநிறுத்தப்படுகிறது. இந்தச் சத்வத்துகள் அல்லது சதீயர்கள்தான் சத**வாகனர்** என்னும்பெயரோடு பின்ன ராண்டனரென்றெண்ணுகிறேன். பவிஷ்யபுராணத்தின்படி, சதவாகனவமிசோற்பவன் முதன்முதலில் இராச்சியமில்லாதவிடத்து அதாவது பிரஜாதிபத்தியமாயிருந்தவிடத்தில், இராச்சியஸ்தாபனம்செய்தானென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு ஜைனகாவியத்தில் இவர்கள் கேரளராச்சியத்திற்குப்பக்கத்தே இருந்ததாகக்கூறப்பட்டிருக்கிறது. அசோகனே கேரளபுத்திரருக்குப் பக்கத்தே சதீயபுத்திரர்களைக்கூறுகிறுன். தென்னுட்டிற் சேர சோழ பாண்டிய இராச்சியங்கள் இருந்தநிலைமையில் இந்த சதீயபுத்திரர் கேரளத்திற்கு வடபாலிருந்திருக்கவேண்டுமென்பதோடு, ஆரியஅரசர்களாயிருந்திருக்கவேண்டுமென்றும் தெரிகிறது. இவர்களைப்பற்றித் தமிழ்நூல்களிற் கூறப்படவேயில்லை*. இஃதொன்றே இவர்கள் ஆரியரென்பதை வலியுறுத்தும். இந்நான்கு இராச்சியங்களும் சுயஇராச்சியமாயினும் அசோகனது மதசம்பந்தமானதர்மங்களுக்குக் கட்டுப்படக்கூடியவை.

அந்தியகஸ்:—சிரியா, பாரசீகத்து அரசனுன செலுக்கஸின் பெயரன். அசோகனது இராச்சியம் தற்போதைய ஆப்கானிஸ்தானமுள்படப் பரவியிருந்தது.

---

* தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற் கிளவியாக்கம் கூசு-ம் சூத்திரவுரையுள், "பவளக்கோட்டு நீலயானை **சாதவாகனன்**கோயிலுள்ளு மில்லை" எனச் சேனுவரையர்கூறியவாற்றுல் இவன் சிறந்த சர்வமிருகசந்தர்சனசாலையொன்று வைத்திருந்தானென்பது தமிழ்நூலால்வெளியாகிறது. ப—ர்.

III-வது சாஸநம்

[illegible]

தேவர்கட்குப் பிரியமானவனும், அரசனுமாகிய பிரியதரிசி பின் வருமாறுசொல்கின்றார்:—சென்ற பன்னீராண்டின்முன்னர்ப் பட்டாபிஷேகம்பெற்றகாலத்து, நாம் நமது சக்கிராதிபத்தியத்திலுள்ள ஒவ்வொரு உத்தியோகஸ்தரும், ராஜுகர்களும், பாதேசிகர்களும், இந்து வருடத்துக்கொருமுறை சுற்றுப்பிரயாணஞ்சென்று இராஜாங்கக்காரியங்களைக்கவனிப்பதோடு பின்வருவனவற்றைப்பற்றி ஜனங்களுக்கு வற்புறுத்தவேண்டுமென்று ஆக்ஞாபித்திருக்கிறோம். தாய்தந்தையருக்குக்கீழ்ப்படிதல் உத்தமமானகாரியம். நட்பினர், தெரிந்தோர், உறவினர், பிராமணர், சிரமணர்களிடம் தயை சிலாகிக்கத்தக்கது. அஹிம்சை பரம தர்மம். சீரானசெலவும் சீரானதனமும் சிலாக்கியமானது. மந்திரிசபையினர் இந்தவிடயங்களைப்பற்றி உத்தியோகத்தினருக்கு வற்புறுத்துவார்களாக.

குறிப்பு:—ராஜுகர், ப்ரதேசிகர் இவர்களிருவரும் கீழ்த்தரஉத்தியோகஸ்தர்கள். அர்த்தசாஸ்திரப்படி ப்ரதேஷ்டிரிகள் கீழ்த்தரக்குற்றவிசாரணை அதிகாரிகளாவர். டாக்டர் தாமஸ் அபிப்பிராயப்படுவதுபோல், ப்ரதேஷ்டிரிகளும், ப்ரதேசிகர்களும் ஒருவரேயென்று நானும் அபிப்பிராயப்படுகிறேன். ராஜுகர்கள் என்போர் உயர்தரநீதிவிசாரணைக்கர்த்தர்களாவர்.

IV-வது சாஸநம்

𑌅𑌤𑌿𑌕𑌾𑌤𑌂 𑌅𑌂𑌤𑌰𑌂 𑌬𑌹𑍂𑌨𑌿 𑌵𑌾𑌸𑌸𑌤𑌾𑌨𑌿 𑌵𑌢𑌿𑌤𑍋 𑌏𑌵 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌰𑌂𑌭𑍋 𑌵𑌿𑌹𑌿𑌂𑌸𑌾 𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌂 𑌞𑌾𑌤𑍀𑌸𑍁 𑌅𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍀 𑌬𑍍𑌰𑌾𑌹𑌮𑌣-𑌸𑍍𑌰𑌮𑌣𑌾𑌨𑌂 𑌅𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑍀𑌪𑌤𑍀 𑌤 𑌅𑌜 𑌦𑍇𑌵𑌾𑌨𑌂𑌪𑍍𑌰𑌿𑌯𑌸 𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌸𑌿𑌨𑍋 𑌰𑌾𑌞𑍋 𑌧𑌂𑌮𑌚𑌰𑌣𑍇𑌨 𑌭𑍇𑌰𑍀𑌘𑍋𑌸𑍋 𑌅𑌹𑍋 𑌧𑌂𑌮𑌘𑍋𑌸𑍋 𑌵𑌿𑌮𑌾𑌨𑌦𑌸𑌣𑌾 𑌚 𑌹𑌸𑍍𑌤𑌿𑌦𑌸𑌣𑌾 𑌚 𑌅𑌗𑌿𑌖𑌂𑌧𑌾𑌨𑌿 𑌚 𑌅𑌞𑍍𑌞𑌾𑌨𑌿 𑌚 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌨𑌿 𑌰𑍂𑌪𑌾𑌨𑌿 𑌦𑌸𑌯𑌿𑌤𑍍𑌪𑌾 𑌜𑌨𑌂 । 𑌯𑌾𑌰𑌿𑌸𑍇 𑌬𑌹𑍂𑌹𑌿 𑌵𑌾𑌸𑌸𑌤𑍇𑌹𑌿 𑌨 𑌭𑍂𑌤𑌪𑍁𑌵𑍇 𑌤𑌾𑌰𑌿𑌸𑍇 𑌅𑌜 𑌵𑌢𑌿𑌤𑍇 𑌦𑍇𑌵𑌾𑌨𑌂𑌪𑍍𑌰𑌿𑌯𑌸 𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌸𑌿𑌨𑍋 𑌰𑌾𑌞𑍋 𑌧𑌂𑌮𑌾𑌨𑍁𑌸𑌸𑍍𑌤𑌿𑌯𑌾 𑌅𑌨𑌾𑌰𑌂𑌭𑍋 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑌂 𑌅𑌵𑌿𑌹𑍀𑌸𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌂 𑌞𑌾𑌤𑍀𑌨𑌂 𑌸𑌂𑌪𑌟𑌿𑌪𑌤𑍀 𑌬𑍍𑌰𑌾𑌹𑌮𑌣-𑌸𑌮𑌣𑌾𑌨𑌂 𑌸𑌂𑌪𑌟𑌿𑌪𑌤𑍀 𑌮𑌾𑌤𑌰𑌿 𑌪𑌿𑌤𑌰𑌿 𑌸𑍁𑌸𑍍𑌰𑍁𑌸𑌾 𑌥𑌯𑌰-𑌸𑍁𑌸𑍍𑌰𑍁𑌸𑌾 । 𑌏𑌸 𑌅𑌞𑍍𑌞𑍇 𑌚 𑌬𑌹𑍁𑌵𑌿𑌧𑍇 𑌧𑌂𑌮𑌚𑌰𑌣𑍇 𑌵𑌢𑌿𑌤𑍇 𑌵𑌢𑌯𑌿𑌸𑌤𑌿 𑌚𑍇𑌵 𑌦𑍇𑌵𑌾𑌨𑌂𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌸𑌿 𑌰𑌾𑌜𑌾 𑌧𑌂𑌮𑌚𑌰𑌣𑌂 𑌇𑌦𑌂 । 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾 𑌚 𑌪𑍋𑌤𑍍𑌰𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌪𑍋𑌤𑍍𑌰𑌾 𑌚 𑌦𑍇𑌵𑌾𑌨𑌂𑌪𑍍𑌰𑌿𑌯𑌸 𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌸𑌿𑌨𑍋 𑌰𑌾𑌞𑍋 𑌪𑌵𑌢𑌯𑌿𑌸𑌂𑌤𑌿 𑌇𑌦𑌂 𑌧𑌂𑌮𑌚𑌰𑌣𑌂 𑌆𑌵 𑌸𑌵𑌟𑌕𑌪𑌾 (a)। 𑌧𑌂𑌮𑌮𑍍𑌹𑌿 𑌸𑍀𑌲𑌮𑍍𑌹𑌿 𑌤𑌿𑌸𑍍𑌟𑌂𑌤𑍋 𑌧𑌂𑌮𑌂 𑌅𑌨𑍁𑌸𑌾𑌸𑌿𑌸𑌂𑌤𑌿 । 𑌏𑌸 𑌹𑌿 𑌸𑍇𑌟𑍇 𑌕𑌂𑌮𑍇 𑌯 𑌧𑌂𑌮𑌾𑌨𑍁𑌸𑌾𑌸𑌨𑌂, 𑌧𑌂𑌮𑌚𑌰𑌣𑍇 𑌪𑌿 𑌨 𑌭𑌵𑌤𑌿 𑌅𑌸𑍀𑌲𑌸 । 𑌤 𑌇𑌮𑌮𑍍𑌹𑌿 𑌅𑌥𑌮𑍍𑌹𑌿 𑌵𑌢𑍀 𑌚 𑌅𑌹𑍀𑌨𑍀 𑌚 𑌸𑌾𑌧𑍁 । 𑌏𑌤𑌾𑌯 𑌅𑌥𑌾𑌯 𑌇𑌦𑌂 𑌲𑍇𑌖𑌾𑌪𑌿𑌤𑌂 । 𑌇𑌮𑌸 𑌅𑌥𑌸 𑌵𑌢𑌿 𑌯𑍁𑌜𑌂𑌤𑍁 𑌹𑍀𑌨𑌿 𑌚 𑌨𑍋 𑌲𑍋𑌚𑍇𑌤𑌵𑍍𑌯𑌾 । 𑌦𑍍𑌵𑌾𑌦𑌸𑌵𑌾𑌸𑌾𑌭𑌿𑌸𑌿𑌤𑍇𑌨 𑌦𑍇𑌵𑌾𑌨𑌂𑌪𑍍𑌰𑌿𑌯𑍇𑌨 (b) 𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌸𑌿𑌨𑌾 𑌰𑌾𑌞𑌾 𑌇𑌦𑌂 𑌲𑍇𑌖𑌾𑌪𑌿𑌤𑌂 ।

தமிழ்

சென்றகாலங்களிற் பிராணிவதையும், ஜீவஹிம்சையும், உறவினர், பிராம்மணர்-ஶ்ரமணர்களிடத்துவெறுப்புமே மேலாடிவந்தன. தேவர்கட்குப்பிரியமானவனும், அரசனுமாகிய பிரியதரிசியினது தர்மப்ரவசனமானது ஜனங்கட்குப் பறைசாற்றுவித்து அறிவிக்கப்பட்டதினின்றும்,

---

(a) 𑌕𑌪𑍇, 𑌕𑌪𑍍𑌵 என்ற பாடபேதங்கள் காணப்படுகின்றன.

(b) முடிவில் 𑌇𑌹 என்று சிலவற்றிலிருக்கின்றது.

ஆகாயவிமானம், யானையேற்றம், வாணவேடிக்கைமுதலியவற்றாலும், பன்னூற்றாண்டுகளாயறியாத இந்தவதை ஜீவஹிம்சைமுதலியவைகள் குறைந்துவருவதோடு, உறவினர், பிராம்மணர், சிரமணர் இவர்களிடத்து நன்னடக்கையும், பெற்றோர், மூத்தோரிடத்துக் கீழ்ப்படிதலும் மேலாடிவருகின்றது.

இந்தத் தர்மக்கோட்பாடுகள் பலவிதத்திலும் பரவிவருவதால், தேவர்கட்குப்பிரியமானவனும் அரசனுமாகிய பிரியதரிசி இன்னும் இத் தர்மம் பரவ ஏற்பாடுசெய்வார். இன்னும், பிரியதரிசியின்புத்திரர், பௌத்திரர், பிரபௌத்திரர்களும் இந்தத்தர்மம் விருத்தியாகும்படியாக இந்த ஸம்வர்த்தகல்பம் முடியும்வரை பார்ப்பார்களாக. இவர்கள் தாங்கள் இந்தத்தர்மங்களை உறுதியாகக்கடைப்பிடிப்பார்களாக. இவர்கள் உறுதியாகக்கடைப்பிடித்துச்செய்யாவிடின், தர்மப்பிரவசனம் முடியாதகாரியமே. இவ்விஷயத்தில் விருத்தி சிலாக்கியமேயொழிய அழிவன்று. இதன்பொருட்டுப் பின்வருமாறு ஆக்ஞாபிக்கின்றோம். ஒரு விஷயத்தின்விருத்தியின்பொருட்டுப் பாடுபடவேண்டும். அதன் அழிவைச் சகியாதே. இவ்விதமாகத் தேவர்கட்குப்பிரியமான அரசனாகிய பிரியதர்சியால், தமது இராஜபாரம்பரியம் பன்னிராண்டுகழிந்தபின் ஆக்ஞாபிக்கப்படுகிறது.

குறிப்பு:—ஊாஂஸ என்றபதத்துக்கு மிஸ்டர் வின்செண்டு ஸ்மித் யக்ஞ பலியென்றுகொள்கிறார். முதலாவதுசாஸநத்தைக்கவனிக்க அது வதையென்று ஏற்படும். அசோகன்முதலாம்சாசனம் எழுதும்காலத்திலேயேபௌத்தமதத்தைத் தழுவினவனுதலாற் றனது அட்டிலிற் பிராணிவதையைப்பற்றிக்கூறுகின்றான்.

விமானம் - ஆகாயக்கப்பல் அல்லது புகைக்கூடுகள்; வைசேஷிகவிதிகளெழுதியவர்களால் ஒருவாகனமெனக் கூறப்பட்டிருக்கின்றன. டாக்டர், ஷ்ரஜேந்திரநாதஸீல் எழுதிய இந்தியரின்விசேஷகிரந்தங்கள் என்னும்புத்தகத்தின் XVI பதும் 351-வது பக்கத்தில் ஹெஹாயஸாநாஂ விஶாநாஂ, யஶோவநிதஜலபவஸகஂ। என்று காணப்படுகிறது. பாணகவி சரித்திரவிஷயங்களைப்பற்றிப் பேசும்போது, ஒரியந்திரத்திற்பறந்து அதினின்று விழுந்து இறந்தாரென்று கூறுகின்றார்.

V-வது சாஸநம்

தேவாநம்ப்ரியோ பியதஸிராஜா ஏவம் ஆஹ: கலாணம் துகரம் யோ ஆதிகரோ (ஆதிகரே) கலாணஸ ஸோ துகரம் கரோதி. த மயா பஹு கலாணம் கதம். த மம புதா ச போதா ச பரம் ச தேந ய மே அபசம் ஆவ ஸம்வடகபா அநுவதிஸரே ததா ஸோ ஸுகதம் காஸதி. யோ து எத தேஸம் பி ஹாபேஸதி ஸோ துகதம் காஸதி. ஸுகரம் ஹி பாபம். அதிகாதம் அந்தரம் ந பூதப்ருவம் தம்மமஹாமாதா நாம. த மயா த்ரைதஸவாஸாபிஸிதேந தம்மமஹாமாதா கதா. தே ஸவபாஸண்டேஸு வ்யாபதா தம்மாதிஸ்டாநாய (c) (தம்மவதியா ஹிதஸுகாய ச) தம்மயுதஸ யோநகம்போஜகந்தாராநம் ரிஸ்டிகபேதேணிகாநம் (d) யே வா பி அபராந்தா (e). பதமயேஸு பாம்ஹணிபேஸு அநாதேஸு வ்ருதேஸு ஹிதஸுகாய தம்மயுதாய அபரிகோதாய *வ்யாபதா தே, பந்தநபதஸ படிவிதாநாய அபரிகோதாய மோக்ஷாய ச இயம் அநுபந்த ப்ரஜா தி வ கதாபிகாரோ தி வ மஹாலகே வா வ்யாபதா தே. பாடலிபுதே ச பாஹிரேஸு ச (நகரேஸு ஸவேஸு ஓரோதநேஸு பாதாநம் ச ஸ்வஸீநம் ச) யே வா பி மே அஞ்ஞே ஞாதிகா ஸவத வ்யாபதா தே. யோ அயம் தம்மநிஸ்ரிதோ தி வ (தம்மாதிஸ்டாநே தி வ தாநஸம்யுதே தி வ ஸவத்ர விஜிதே மம தம்மயுதஸி வ்யாபதா தே) தம்மமஹாமாதா. எதாய அதாய அயம் தம்மலிபீ லிகிதா.

(c) கலாஸி கல்வெட்டிலிருந்து பூர்த்திசெய்யப்பட்டது.

(d) கலாஸி கல்வெட்டில் ரிஸ்டிகபேதேணிகா என்பதில்லை.

(e) அபராதா என்றிருக்கவேண்டும்.

* அப்ரிதிபோதாய என்றிருக்கவேண்டும்.

தமிழ்

தேவர்கட்குப்பிரியமான அரசனாகிய பிரியதரிசி இவ்விதமாகக் கட்டளையிடுகிறார். நன்மைசெய்வது கஷ்டம். ஒரு நல்லகாரியத்தை முதலில் ஆரம்பிப்பவன் கஷ்டமானகாரியத்தைச் செய்கின்றான். அப்படிப் பலவிஷயங்கள் என்னால் செய்யப்பட்டிருக்கின்றன. என்னுடைய புத்திரர்களும், பௌத்திரர்களும், அவர்களதுபின்னோரும் இதேமாதிரி சற்காரியங்களைக் கல்பாந்தரகாலம் ஸ்தாபித்துச்செய்துவருவது உத்கிருஷ்டமானகாரியங்களைச் செய்துவருவதாகும். ஆயினும், இப்பொழுதுநடந்தேறிவருவதைக்கூடப் புறக்கணிப்பவன் பாபத்தைச்செய்தவனாவான். பாவஞ்செய்தல் எளிது.

சென்ற பன்னாட்களில் தர்மமஹாமாத்திரர்களென்று ஒருசபையோ ரில்லை. அதனை எனது பதின்மூன்றாவதுவருடத்தில் ஸ்தாபித்திருக்கின்றேன்.

அவர்கட்குப் பாஷண்டரைக்கூட விசாரணைபுரிய அதிகாரமுண்டு.

மாகாண அத்தியக்ஷர்களை விசாரணைபுரியவும், கிரேக்க, காம்போஜ, காந்தார, ராஷ்டிரிக, பேதணிகர் மற்ற அபராந்தர் நடுவிலேற்பட்டிருக்கும் தர்மபிரசாரகர்கட்கு உதவிபுரியவும் அதிகாரமுண்டு.

ஆதரவில்லாதவர்கட்கும், பெருமையிழந்தவர்கட்கும், அநாதைகட்கும், வயோதிகர்கட்கும் ஹிதஸுகங்களைச்செய்ய அதிகாரமுண்டாவதோடு, தர்மபிரசாரகர்கள் அதிக சிரமப்படாமற் பார்க்கவேண்டும்.

தண்டனையில்,சரீரவாதனைக்குட்படுத்தப்பட்டபோது,கடுங்காவற்றண்டனைகளை மாற்றவும், குழந்தைமுதலானவர்கள் குற்றவாளியை சம்ரக்ஷணைக்கு எதிர்பார்க்கும்போதும், வயோதிகனாயினும் விடுதலை செய்யவும் அதிகாரமுண்டு.

அவர்கட்குப் பாடலிபுத்ரத்திலிருக்கும் என்னுடைய சகோதர சகோதரிகள் உறவினருடைய அரமனைகளிலும், மற்றத் தலைமைநகரங்களிலும் அதிகாரம் செல்லும்.

இத்தேசமுழுவதும், தர்மபிரசாரகர்களாயினும், அத்தியக்ஷர்களாயினும், தர்மாதிகாரியாயினும் எல்லோர்மேலும் தர்மமஹாமாத்திரர்கள் அதிகாரஞ்செலுத்தக்கூடும்.

இதற்காக இந்தப்பத்திரம் எழுதப்பட்டது. இது நீடூழிவாழ்வதாக. என் சந்ததியார் இதனை அநுசரிப்பார்களாக.

குறிப்பு:—இந்தச்சாசனத்தில் அசோகமஹாராஜன் புதிதாக ஒருஸ்தாபனம் உண்டாக்கியிருப்பதாக்க் கூறுகிறுர்.

மஹாமாத்திரர்கள் என்போர் அர்த்தசாஸ்திரப்படி முக்கியமந்திரிகளாவர். பாடலிபுத்ரத்திலிருக்கும் மஹாமாத்திரர்கள் இப்பொழுது நாம் இம்பீரியல் மந்திரிகள் என்போரைப்போன்றோர்கள்.

தர்மத்தைப்பரிபாலனம்செய்ய அசோகமஹாராஜன் புதிதாக ஒருவிதஅதிகாரிகளை நியமித்தார். அவர்களே தர்ம பிரசாரகர்கள். இவர்களை மஹாமாத்திரர்கள் விசாரிக்காதபடி தர்மமஹாமாத்திரர்களென ஒருவகையினரைநியமித்தனர். அரசன் விசாரணையிலிருந்த அநேகவிஷயங்களை இவர்களைக்கொண்டு விசாரணைபுரிய ஏற்படுத்தினுர் என்று அர்த்தசாஸ்திரத்தால்(பக்கம் 39)றெரிகிறது. (𑌵𑌾𑌷𑍍𑌣𑍁 .... 𑌵𑌾 𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌧𑌿𑌨𑌵𑍍𑌯𑌸𑌨𑍀𑌨𑌾𑌥𑌾𑌨𑌾𑌂 𑌦𑍇𑌵𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌕𑍃𑌤𑍇𑌣 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌯𑍇𑌤 ।) இவர்களையெல்லாம் தர்மமஹாமாத்திரர்களது விசாரணைக்குட்படுத்தினுர்.

VI-வது சாஸநம்

𑌦𑍇𑌵𑌾𑌨𑌂𑌪𑍍𑌰𑌿𑌯𑌪𑍍𑌰𑌿𑌯𑌦𑌰𑍍𑌶𑍀𑌰𑌾𑌜𑌾 𑌏𑌵𑌂 𑌆𑌹 । 𑌅𑌤𑌿𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌅𑌨𑍍𑌤𑌰𑌂 𑌨 𑌭𑍂𑌤𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌾𑌲𑌂 𑌅𑌰𑍍𑌥𑌕𑌰𑍍𑌮 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑍇𑌦𑌨𑌾 𑌵𑌾 । 𑌤𑌨𑍍𑌮𑌯𑌾 𑌏𑌵𑌂 𑌕𑍃𑌤𑌂 । 𑌸𑌰𑍍𑌵𑍇𑌕𑌾𑌲𑍇 𑌭𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑌸𑍍𑌯 𑌮𑍇 𑌅𑌵𑌰𑍋𑌧𑌨𑍇𑌷𑍁 𑌗𑌰𑍍𑌭𑌾𑌗𑌾𑌰𑍇𑌷𑍁 𑌵𑍍𑌰𑌚𑍇𑌷𑍁 𑌵𑌿𑌨𑍀𑌤𑍇𑌷𑍁 𑌚 𑌉𑌦𑍍𑌯𑌾𑌨𑍇𑌷𑍁 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑍇𑌦𑌕𑌾𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌅𑌰𑍍𑌥𑌂 𑌮𑍇 𑌜𑌨𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑍇𑌦𑌯𑌨𑍍𑌤𑍁 𑌇𑌤𑌿 । 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌚 𑌜𑌨𑌸𑍍𑌯 𑌅𑌰𑍍𑌥𑌂 𑌕𑌰𑍋𑌮𑌿 । 𑌯𑌚𑍍𑌚 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌨𑍍𑌮𑍁𑌖𑌤𑌃 𑌆𑌜𑍍𑌞𑌾𑌪𑌯𑌾𑌮𑌿 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌦𑌾𑌪𑌕𑌂 𑌵𑌾 𑌶𑍍𑌰𑌾𑌵𑌕𑌂 𑌵𑌾 𑌯𑌦𑍍𑌵𑌾 𑌪𑍁𑌨𑌰𑍍𑌮𑌹𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌆𑌤𑍍𑌯𑌯𑌿𑌕𑌮𑌾𑌰𑍋𑌪𑌿𑌤𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌤𑌾𑌯 𑌅𑌰𑍍𑌥𑌾𑌯 𑌵𑌿𑌵𑌾𑌦𑍋 𑌨𑌿𑌧𑍍𑌯𑌾𑌤𑌿𑌰𑍍𑌵𑌾 𑌸𑌂𑌸𑌦𑌾. 𑌪𑌰𑌿𑌷𑌾𑌯𑌂 𑌆𑌨𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑍇𑌦𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌂 𑌮𑍇 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌕𑌾𑌲𑍇𑌷𑍁 । 𑌏𑌵𑌂 𑌮𑌯𑌾 𑌆𑌜𑍍𑌞𑌾𑌪𑌿𑌤𑌂 । 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌹𑌿 𑌮𑍇 𑌤𑍋𑌷𑍋 𑌉𑌤𑍍𑌥𑌾𑌨𑌂 𑌹𑌿 𑌅𑌰𑍍𑌥 𑌸𑌨𑍍𑌤𑍀𑌰𑌣𑌾𑌯 𑌚 । 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑌤𑌂 𑌹𑌿 𑌮𑍇 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌹𑌿𑌤𑌂 । 𑌤𑌸𑍍𑌯 𑌚 𑌪𑍁𑌨𑌰𑍇𑌷 𑌮𑍂𑌲𑌂 𑌉𑌤𑍍𑌥𑌾𑌨𑌂 𑌚 𑌅𑌰𑍍𑌥𑌸𑌨𑍍𑌤𑍀𑌰𑌣𑌾 𑌚 । 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌹𑌿 𑌕𑌰𑍍𑌮𑌤𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌹𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌯𑌚𑍍𑌚 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌾𑌮𑌿 𑌅𑌹𑌂 𑌕𑌿𑌨𑍍𑌤𑌿 । 𑌭𑍂𑌤𑌾𑌨𑌂 𑌆𑌨𑍃𑌣𑍍𑌯𑌂 𑌗𑌚𑍍𑌛𑍇𑌯𑌂 𑌇𑌹 𑌚 𑌨𑌾𑌨𑌿 𑌸𑍁𑌖𑌾𑌪𑌯𑌾𑌮𑌿 𑌪𑌰𑌤𑍍𑌰

𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌆𑌰𑌾𑌧𑌯𑌨𑍍𑌤𑍁। 𑌤𑌦𑌰𑍍𑌥𑌾𑌯 𑌅𑌯𑌂 𑌧𑌰𑍍𑌮𑌲𑌿𑌪𑌿𑌰𑍍𑌲𑍇𑌖𑌿𑌤𑌾। 𑌕𑌿𑌮𑌿𑌤𑌿, 𑌚𑌿𑌰𑌂 𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌯𑌿𑌤𑌿 𑌤𑌥𑌾 𑌚 𑌮𑌮 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾 𑌪𑍌𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌪𑍌𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌚 𑌅𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌹𑌿𑌤𑌾𑌯 𑌦𑍁𑌷𑍍𑌕𑌰𑌂 𑌤𑍁 𑌇𑌦𑌂 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌅𑌗𑍍𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।

தமிழ்

தேவர்கட்குப்பிரியமான அரசனாகிய பிரியதர்சி இவ்விதம்கட்டளையிடுகிறார். முன்னாட்களில் அரசன் சதாகாலமும் சமஸ்தானவிஷயங்களைக் கவனித்ததில்லை. அரசனிடம்தெரிவிப்பதுமில்லை. நான் பின்வருமாறு உத்தரவிடுகிறேன். "ஆகாரம்செய்யும்பொழுதும், அரமனையிலிருக்கும்போதும், அந்தப்புரத்திலிருக்கும்போதும், தேகாப்பியாசம், ராணுவப்பயிற்சிசெய்யும்பொழுதும், உய்யானவனத்திலிருக்கும்போதும், அரசாங்க உத்தியோகத்தினர் கூடவிருந்து சமஸ்தானவிஷயங்களைத் தெரிவிக்கவேண்டியது. அந்தஇடங்களிற்கூட அவைகளை நான் கவனிப்பேன். மேலும் நான் வாக்கால் தெரிவித்ததை நிறைவேற்றாமல் மந்திரிகட்கு வேறுவேலையிருந்தபோதிலும் அபிப்பிராயபேதமேற்பட்டாலும் உடனுக்குடன் தெரிவிக்கவேண்டியது. இவ்விதமாகக் கட்டளையிடுகிறேன். நான் இப்பொழுதுசெய்துவரும் சமஸ்தானவிஷயம் திருப்தியைக் கொடுக்கவில்லை. ஜனங்கள் க்ஷேமமாயிருக்கவேண்டுமென்பதே என்கடமை. அதன் இரகசியம் பொதுக்காரியத்தை ஊக்கத்தோடு செய்வதே. பொதுக்ஷேமத்தைத்தேடுவதைவிடப் பெரியவேலை இல்லை.

நான் ஏன் இவ்வளவு பிரயாசைப்படவேண்டுமெனின், நான் உலகத்திற்குச்செய்யவேண்டியகடமையைச் செய்யவேண்டுமென்றேதான். சிலரையாவது இம்மையில் சந்தோஷமாயிருக்கச்செய்வேனேயாயின் மறுமையில் அவர்கள் சுவர்க்கத்தையடையக்கூடும்.

இந்த ஆக்ஞாபத்திரம் பிறக்கக்காரணமென்னவெனின், இச் சாசனம் நிலைபெறவும், எனது புத்திர பௌத்திர பிரபௌத்திரர்கள் பொதுநலத்தைக்கோருவது அதியூக்கமின்றி நடைபெறக்கூடாததாகையால் அதனைக் கடைப்பிடித்தொழுகவுமேயாம்.

குறிப்பு:—இந்தச்சாசனத்தில் மந்திரிகட்கும், தனக்கும் ஏற்பட்ட அபிப் பிராயபேதங்களைத் தெரிவிப்பதால் இது வெகு முக்கியமானது. மந்திரிகள் இந்தத் தர்மமஹாமாத்திரர்களிடம் அருவெறுப்புடையராயினரென்றுகாண்கி றது. திவ்யவாதனத்தால், பண்டாரியான ராதாகுப்தர் அசோகமஹாராஜனது ஆக்ஞைகளைப் பௌத்ததர்மங்கள்விஷயமாய் நிறைவேற்றுவதாகத்தெரிகிறது.

வரீர்ச்சா, விநீத என்ற பதங்கட்கு ஒதுக்கிடம் என்றும் வாகனம் என்றும் ஐரோப்பியர் பொருள்கொள்கின்றனர். அர்த்தசாஸ்திரம், யாஜ்ஞவல்கியஸ்மிரு திகளிற் கூறப்பட்ட ராஜகாலதர்மத்தைக் (Time-Table) கவனிப்போமாயின் விசதமாகும். அர்த்தசாஸ்திரப்படி அரசன் அதிகாலையில் சிம்மாசனத்திற்கு வந்து இராஜாங்க விஷயங்களைக் கவனித்துப் பிறகு பொதுமனுக்களை அங்கீ கரிப்பார். 9 மணிக்கு ஸ்நாநமும் காலைப்போஜனமும். சந்திரகுப்தன்காலத்தில், யவநதூதனான மகாஸ்தனிஸ் அரசன் மனுப்பெறுங்காலமாகக்கூறுவதுமிதுவே. போஜனத்திற்குப்பிறகு கல்வியாராய்ச்சி. அசோகன் அரமனையிற் போஜனத் திற்குப்போகுங்காலத்திற்கூடப் பிரஜைகளதுநன்மையைக் கவனிப்பதாகக்கூறு கிறான். 10-30முதல்12 மணிவரை பொதுவிஷயம் கவனித்தல், 12முதல்1-30 மணிவரைவேடிக்கைவிநோதங்களும் ஒய்வும். அசோகன் நிலக்கீழறை(கர்ப்ப-அக ரம்)யில் தங்கல் ராஜோ ஹ்ருஷ்டேந த்ருப்தேந யஜ்ஞாயாம் ஸ்வாவஸேநம் । ஸ்வஸ்திரே ஹ்ருஷ்டேந த்ருப்தேநாஸநஸ்வஸ்திவிசயஸ்யா ॥ சாயங்காலம் ராணு வப்பயிற்சிக்குச் செல்லுதல். பிறகு ஸந்தியாவந்தனம். அசோகனுக்குச் சந்தி யில்லாமையால் உத்யானத்திலிருப்பார்.

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர்-சோமசுந்தரதேசிகன்.

---

*வேத்துணையோர்பரிபாடல்.

தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்றுசங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள் தலைச்சங்கமிருந்தார் அகத்தியனாருந் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும், குன்றமெறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின்கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்றுநாற்பத்தொன்பதின்மர் என்பது. அவருள்ளிட்டு நாலாயிரத்துநானூற்றுநாற்பத்தொன்பதின்மர் பாடினார்என்பது. அவர்களாற்பாடப்பட்டன வேத்துணையோர்பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் என இத்தொடக்கத்தன.............. அவர்களைச் சங்கமிரீஇயினார் காய்சினவழுதிமுதலாகக் கடுங்கோனீறாக எண்பத்தொன்பதின்மர் என்ப. இங்குச்சொல்லப்பட்ட "வேத்துணையோர்பரிபாடல்"என்பதை நோக்குக. இஃது இறையனாரகப்பொருளுரையிற்கூறப்பட்ட தமிழ்ச்சங்கவரலாறு. இவ்வுரையைப் பரீக்ஷை செய்து அச்சிட்டவர் நமதுநண்பராகிய சி. வை. தாமோதரம்பிள்ளை.

பின்னர் இதனைப் படியெடுத்துத் திராவிடப்பிரகாசிகையிலே ௨௬-ம் பக்கத்திலே கோப்பாய்ச் சபாபதிநாவலர்கூறினர். ௮௨-ம் பக்கத்திலே "வேத்துணையோர்பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை என்றித்தொடக்கத்துத் தலைச்சங்கஇலக்கியம்" என்றார். இங்கேயும் இரண்டிடத்திலே "வேத்துணையோர்பரிபாடல்" என்பது வருகின்றது. இந்த "வேத்துணையோர்பரிபாடல்" என்பதைப்பற்றி ஞானசக்ரப்பஞ்சிகை ஒன்றிலே தடைகாட்டி வாதித்தாம். விடையோ வந்திலது.

பின்னுஞ் சங்கவிஷயம்கூறுவார்பலர் 'வேத்துணையோர்பரிபாடல்' என்பதையும் வழிமொழிகின்றனர். அறிவுவிளக்கம் என்னும் பத்திரிகையிலும் ஒருவர் வழிமொழிந்தனர். வேறும் ஒருவர் ஒருபத்திரிகையில் வழிமொழிந்தனர். பேரகத்தியப்பிரசாரமுகவுரையிலும் "வேத்துணையோர்பரிபாடல்" என்பது வருகின்றது. இங்ஙனமே "வேத்துணையோர்பரிபாடல்'' என்பது வழிவழிவந்து பலராலும் வழங்கப்படுவதொன்றாயிற்று. நிற்க.

---

* இதற்குப் பத்திராதிபரபிப்பிராயம் அடுத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இனி இந்த "வேத்துணையோர்பரிபாடல்" என்பது யாதோ என வினாவித்தெளிதல் யாவர்க்கும் ஆவசியகம். "வேத்துணையோர்பரிபாடல்" என ஒருநூல் உண்டென்பதற்கு அஜபரம்பரைநியாயமாக வந்த இவையன்றி வேறுசான்றுகளும் உளவா? வேத்துணையோராவார் யாவர்? பாடினவரா? பாடுவித்தவரா? பாடினவரெனின், "அவர்களாற்பாடப்பட்டன" என முன்வருதலால் அது பொருந்தாது. பாடுவித்தவரெனின், வழுதிமுதலியோருள் ஒருவரெனல்கூடாமையானும், கிளந்துகூறுமையானும் அதுவும் பொருந்தாது. பிறரெனின், அவர்தாம் யாவர்?

சிலப்பதிகாரத்திலே வேனிற்காதையுரையிலே அடியார்க்குநல்லார் தலைச்சங்கப்புலவர்பாடல்கூறுங்கால் "எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையுமுள்ளிட்டவற்றைப் புணர்ந்து" என்றார். சிலப்பதிகாரவுரையின் உதாரணவிவரணத்திலே பழந்தமிழ்ப்பரிபாலனத்திற் சிறந்துவிளங்கும் மஹாமகோபாத்தியாயராகிய சாமிநாதையரவர்கள் "தலைச்சங்கப்புலவர்களால் எண்ணிறந்த பரிபாடல்களும்" என்றார்கள். இங்கேயும் இறையனாரகப்பொருளிலேயும் தலைச்சங்கப்புலவர்பாடல் எனக்கூறிய பரிபாடலிரண்டும் ஒன்றேயன்றோ! இங்கே பரிபாடற்குக்கூறிய "எண்ணிறந்த" என்னும் விசேடணம் அங்கே வராதொழியுமா? இவ்விசேடணமாவது இவ்விசேடணப்பொருளாவது அங்கேயும்வரும் எனக்கொண்டு அதனை எத்துணையோபரிபாடல் என்று திருத்திக்கொண்டால் என்னை? "எத்துணையோ" என்பது எண்ணிறந்த எனப் பொருள்படாதோ? "அவராற் பாடப்பட்டன எத்துணையோபரிபாடல்" என்பது பழைய ஏட்டிலே "அவராற் பாடப்பட்டன வெததுணையொா பரிபாடல" என இலேககராால் எழுதப்பட்டிராதா? எத்துணை என்பது வகரவுடம்படுமெய்யொடு "வெததுணை" என எழுதப்படுதலும், குறினெடிற் பேதமின்மையும், பிழைபட ரகரமெய்போலப் பலகூட்டியெழுதலும் இலேககர்வழக்காறன்றோ! இதனைநோக்கி இங்கே பத்திராதிபரவர்கள் அபிப்பிராயங் கூறல் நன்று. மகாமகோபாத்தியாயராகிய சாமிநாதையரவர்களும் சாவகாசமாயின், அபிப்பிராயங்கூறல் நன்று. திருத்தமுஞ் சித்திக்கும்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை,

சுன்னாகம்.

ஸ்ரீ:

பத்திராதிபராபிப்பிராயம்.

அச்சிட்ட களவியலுரைப்பாயிரத்துள்ளும், பிறபுத்தகமுதலியவற்றுள்ளும் முதற்சங்கநூல்களையெண்ணுமிடத்து "வேத்துணையோர்பரிபாடல்" என்றெழுதியிருப்பதைப்பற்றிச் சுன்னுகம் வித்வான் ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்க ளாராய்ந்தெழுதியதிருத்தம் மிகப் பொருத்தமுடையதாயிருக்கிறது. சிலப்பதிகார உரைப்பாயிரத்தின் கீழ்க்குறிப்பில் மஹாமஹோபாத்தியாய ஐயரவர்கள்காட்டியதொரு பழையபாட்டினுள் முதற்சங்கநூல்களையெண்ணியவிடத்து, "புரிந்தன செய்யுட் பெரும்பரிபாடலும்" என்றதன்கண்ணும் பெருமை எண்ணின் மிகுதிபற்றியதெனக்கொள்ளினும் இழுக்காமையா லிதுவும் அதனை விரோதிக்கவில்லை.

அச்சிட்ட களவியலுரையுள் முன்புறத்து "வடவேங்கடந்தென் குமரி, ஆயிடைத், தமிழ்கூறுநல்லுலகத்து" என்னுந் தொடர்களைத் தொல்காப்பியனார்சொல்லியதாக இடைச்செருகி எழுதியிருப்பதால் அதன் மூலப்பிரதி, முன்னோரெழுதிவைத்த சொன்முறையைப் போற்றியெழுதாது தமக்குத்தோன்றியவற்றையும் இடைச்செருகியெழுதும்வரால்வரையப்பட்ட பிழைப்பிரதியாயிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. ஆதலால் அதன் பின்புறத்திலுள்ள "வேத்துணையோர் பரிபாடல்" என்பது பிழையில்லதாயிருக்கலாமென்று நம்புவதற்கிடமில்லை.

நம் தமிழ்ச்சங்கத்திலுள்ள ஒரு பழையபிரதியில் முதற்சங்கநூல்களை யெண்ணியவிடத்தும் "வேத்துணையோர்பரிபாடல்" என்றுகாணப்படவில்லை. முதற்கட் பரிபாடையும், என்று தெளிவாயெழுதப்பட்டிருக்

கிறது. கடைச்சங்கநூல்களையெண்ணுமிடத்து நெடுந்தொகை முதலிய வற்றை முற்படவெண்ணி யிடையே "எழுபது பரிபாடலும்" என்று தெளிவாயெழுதப்பட்டிருக்கிறது. ஒருவரெழுதியதான உரைநடையில் முதலும் இடையுமாகவைத்தெண்ணிய இடவேறுபாட்டையும், பரி பாடை, பரிபாடல் என எழுத்தானும் தெளிவாயெழுதிய சொல் வேறுபாட்டையும் உற்றுநோக்கும்பொழுது கடைச்சங்கநூலுளெண் ணிய பரிபாடலினின்றும், முதற்சங்கநூலுளெண்ணிய பரிபாடை என் பது பிறிதொன்றோ? அன்றோவென் றையுறுதற்கிடனாகின்றது.

வடமொழியுள் நூற்பொருளையமறத்தெளிவிக்குங்கட்டுரைகளைப் பரிபாஷையென்பர். அவற்றை விரித்துணர்த்தும் தனிநூலும் உண்டு. தமிழிலும் சித்தர்பாடலுள்ளும் பரிபாஷை என நூற்பெயர்வழங்குவ துண்டு. "வழக்குஞ் செய்யுளுமாயிரு முதலி, னெழுத்துஞ் சொல்லும் பொருளு நாடி"ய தொல்காப்பியத்துள் நூலிலக்கணம்சொல்லப்பட்ட மையால் அவ்விலக்கணமமைந்த பல தமிழ்நூல்கள் தொல்காப்பியத் துக்குமுற்பட்டிருந்தனவென விளங்குகின்றன. அவற்றிற்கின்றியமை யாத பரிபாஷைமுறைகளை (அதாவது "முற்கூறியதிற் பிற்கூறியது வலியுடைத்து"என்பதுபோன்ற நூற்பொருளையமொழிக்குநெறிகளை) விரித்துரைத்துள்ளதொரு தமிழ்நூல் முதற்சங்ககாலத்தி லிருந்திருக்க வொண்ணாதாவென்பதுசங்கை. இதுவும், பலபிரதிகளைக்கொண்டு பண்டிதராலாராய்ந்து தெளியத்தக்கது.

திரு. நாராயணையங்கார்,

சேந்தமிழ்ப்பத்திராதிபர்.

ஆக்கச்சொல்விளக்கம்.

"செந்தமிழ்" (தொகுதி ௧௨ பகுதி ௨-ல்) ௫௯-ம்பக்கத்தொடர்ச்சி.

இனி, ஆண்டு('செப்பமுடையவனாக்கஞ்சிதைவின்றி,யெச்சத்திற் கேமாப்புடைத்து'என்புழி)க்கூறப்பட்டது செயற்கைப்பொருளென்ற வாறு என்னை? அதுபற்றி வருவித்துரைக்கப்பட்ட அவ்வாக்கச்சொல் ஐயுருபேற்ற தொழிற்பெயராதல்வேண்டுமாறும் என்னையோவெனிற் கூறுதும்.

இத்திருக்குறளின்பொருள்:—செப்பமுடையவனது செல்வம் சிதைவுளதாகாது. அதனால் அச்செல்வம் அவன்வழியிலுள்ளார்க்கு வலியாதலையுடைத்து என்றவாறு.

ஏனையோர்போலச் செல்வமுடைமையே உடைமையெனக் கொண்டு மயங்குதலிலனாய் உடைமையெனப்படுவது செப்பமுடைமையேயெனக்கொண்டு மற்றெதனைவிடுவானாயினும் அதனை விடாது காத்தொழுகுபவன் என்பார் செப்பமுடையவன் என்றும், அவன் 'திறனறிந்து தீதின்றிவந்தபொருள்'கொண்டு 'இல்லதென்' என்றற்கு ஏதுவாகிய மாண்புடைமனையாளொடும் தலையாய அறம்புரிந்து ஒழுகுமாற்றால்; தக்கார்கைப்பட்டு வான்சிறிதாப்போர்த்துவிடுமென வளர்ந்தோங்குசெல்வம் என்பார் ஆக்கம் என்றும், அவன்வழியிலுள்ளாரும் அவ்வாறே அறம்புரிந்து இன்பமெய்தி உயிர்க்கு உறுதியானவற்றை எளிதின் அடைதற்கு அச்செல்வம் ஏதுவாம் என்பார் எச்சத்திற் கேமாப்புடைத்து என்றும் கூறினார்.

அவன்வழியிலுள்ளார்க்கு வலியாமெனவே அவனுக்கு வலியாமென்பது சொல்லாமையே பெறப்பட்டது.

வழியிலுள்ளார் என்பது இரட்டுறமொழிதல்.

ஆக்கம் மேன்மேலுயர்தல், செல்வத்துக்கு ஆகுபெயர்.

செப்பம், தகுதி, நடுவுநிலைமை, கோடாமையென்பன ஒருபொருட்கிளவி.

எச்சம் என்பதனுள் அம் வினைமுதற்பொருளையுணர்த்தும் விகுதி.

செப்பமுடையவன் என்பது இருமனப்பெண்டிருங் கள்ளுங் கவறு மென்னும் இத்தொடக்கத்தனவற்றின் தொடர்பிலன் என்னும் ஏதுவை உட்கொண்டுநின்றது.

இனி, ஆக்கம் என்பது செல்வமாத்திரைக்கேயன்றி அறம் புகழ் கட்குமாம். இது 'பேதைமையென்பதொன்று' என்னும் குறளுரை யுட் பரிமேலழகர்கூறியவாற்றானும் அறிக. அக்கருத்துக்கியையப் பொருள்படுமாறும் உய்த்துணர்ந்துகொள்க.

இனி, செல்வம் என்பதோ சிதையுமாலைத்தாம், அது 'அறக்காவியல் பிற்றுச்செல்வம்' என்னும் திருவாக்கானும் தெளியப்படும். ஆகவே ஆக்கம் சிதையும் எனக்கூறின் இயற்கைப்பொருளை யிற்றெனக்கிளத்த லாம். ஈண்டு ஆக்கம் சிதைவிலதெனக்கூறலின் செயற்கைப்பொருளா மாறுகண்டுகொள்க. செயற்கைப்பொருளை ஆக்கமொடுகூறல்வேண்டு தலின் சிதைவிலது என்பதற்குச் சிதைவுளதாகாதென உரைவிரிக்கப் பட்டது. இனி இது காரணமுதற்றாய்வந்தவாறும் மேற்கூறியவாற் றான் அறிந்துகொள்க.

இனி, அச்செல்வம் சிதைவுளதாகாமை மேலும் அதுகாரணமாக அவன்வழியிலுள்ளார்க்கு வலியுமாயின் அதுவுஞ் செயற்கையேயாக லின் அத்திருக்குறளுட்கூறப்பட்டது செயற்கைப்பொருளாதல் தெ ளிந்துகொள்ளப்படும் என்க.

சிதைவின்றியென்னும் செய்தெனெச்சக்குறிப்பு, காரணகாரியப் பொருட்டு. அது வினைமுதல்வினையான்முடியும், மருந்துண்டுநல்லன், ("வளர்ந்தயர்ந்தனே", "ஈந்துபுகழ்பெற்றான்") என்புழிப்போல. அஃது ஈண்டு 'ஆக்கம்......... ..எச்சத்திற்கேமாப்புடைத்து' என்னும் மேற் கோளைச்சாதிக்கும் குறிப்பேதுவாய் நின்றவாறறிக.

சிதைவின்றியென்பதற்குச் சிதைவுளதாகாது அதனால் என உரைவிரிக்கப்பட்டவாறும் இவ்வேது காரியப்பொருண்மை யினிது விளங்குதற்பொருட்டென்க. இந்நெறியை 'உயிரெனப்படுவதிந்தவுட லின்வேறாயதாயுற்று' என்னும் சிவஞானசித்தியாருரையுளே ஆசிரியர் சிவஞானமுனிவர் இவ்வாறு விரித்துரைத்து உளதாய் முதலிய ஏழும்

குறிப்பேதுவாகலான் அவற்றை யிவ்வாறு விரித்துரைக்கப்பட்டதென விசேடவுரைகூறி விளக்கியவாற்றானுந் துணிந்துகொள்க.

ஆசிரியர்பரிமேலழகர் 'உழுதுண்டுவாழ்வாரே'என்னுங் குறளுரையுள் உழுது அதனால் தாம் உண்டு எனவும், 'கலந்துணர்த்துங்காதலார்' என்னுங் குறளுரையுள் கலவிதன்னானேநீக்கவல்ல எனவும் கூறியதும் இக்கருத்துப்பற்றியே என்க.

இனி, 'உழுதுண்டுவாழ்வாரே' என்புழி உழுது என்பதற்கு உழுதலைச்செய்து எனவும், 'ஏரினுழாஅர்' என்புழி உழார் என்பதற்கு உழுதலைச்செய்யார் எனவும், 'அழுக்கற்றகன்றாரும்' என்புழி அழுக்கற்று என்பதற்கு அழுக்காற்றைச்செய்து எனவும், 'அன்பிலனான்ற' என்புழித் துவ்வான் என்பதற்குத் துவ்வினைச்செய்யான் எனவும்,கொல்லாமை என்பதற்குக் கொல்லுதலைச்செய்யாமை எனவும், பொச்சாவாமை என்பதற்குப் பொச்சாப்பைச்செய்யாமை எனவும், கள்ளாமை என்பதற்கு வஞ்சித்துக்கொள்ளக்கருதாமை எனவும், அவர் சொற்பெய்துரைத்தவாறெல்லாம் காரியப்பொருண்மைவிளங்குதற்பொருட்டென அறிக. அங்ஙனம் விரிபெற்றசொற்களைக் காரியவாசகமென உரையாசிரியர்கள் குறியிட்டாளுதலானும் அவ்வுண்மை துணிந்து கொள்ளப்படுமென்க.

பாவகத்தைப்பாவித்தல் (சிவஞானபோதம்) அணியலும் அணிந்தன்று (கலித்தொகை) கொளலோகொண்டான் என்புழிக் காரியவாசகம் வந்தவாறுகாண்க. இவற்றியல்பெல்லாம் 'வினையேசெய்வது' என்னும் சூத்திரவுரையானும், தருக்கசங்கிரகவுரையீற்றில் ஆசிரியர் சிவஞானமுனிவர் விரித்துரைத்தவாற்றானும் அறிந்துகொள்க.

'பிரியாரெனவிகழ்ந்தேன்முன்னம்யான்பின்னையெற்பிரியிற்,றரியாளெனவிகழ்ந்தார்மன்னர்தாம்' என்னும் திருக்கோவையார் உரையுட் பேராசிரியர் பிரியின் என்பதற்குப் பிரிகின்றாராகஉணரின் என்று பொருளுரைத்து, 'உண்மையாற் காரணமாவனவும் உணரப்பட்டாற் காரணமாவனவும் எனக் காரணம் இருதிறத்தன. அவற்றுட் பிரிவு தரியாமைக்கு உணரப்பட்டாற் காரணமாம்; ஆகலின் பிரியின் என்புழிப் பிரிகின்றாராகவுணரின் என்பது ஆற்றலாற்பெற்றாம். புலிவரின் அஞ்சும் என்புழிப்போல'என்று விசேடவுரைகூறியவாறு மறிக. இத்துணையுங் கூறியவாற்றால், காரணகாரியப்பொருண்மைபற்றிச் சொற்கள் விரித்துரைக்குமாறு உணர்த்தப்பட்டது.

ஆகவே, ஆண்டுச் செயற்கைப்பொருள் காரணம் அடுத்துவந்த வாறு தெளியப்படும். படவே; அதற்கு ஆக்கச்சொல்வேண்டுமென்ப தாயிற்று.

அதுநிற்க, அத்திருக்குறளுட் சொற்கள் நின்றாங்குநிற்ப ஆக்கம் என்னும் எழுவாயும், சிதைவின்றி என்னும் செய்தெனெச்சக்குறிப்பும், ஏமாப்பு என்னுஞ்சொல்லும் முடியாவாயின. ஆகலின் அவற்றிற்கு முடிபு வேறுதல் வேண்டப்படும்.

மற்று, அவையெல்லாம் உடைத்து என்னும் வினைக்குறிப்புமுற் றைக்கொண்டு முடிந்தனவென்றாற்படும் இழுக்கென்னையோவெனின், அற்றேல் ஆக்கமும் ஏமாப்பும் பொருளான் ஒன்றென்பதுபடாது, வெவ்வேறாய், ஒன்று உடையதும் மற்றொன்று உடைமையுமாம் எனப் பட்டுப் பொருளிலமொழிதலென்னும் குற்றமாமென மறுக்க.

அதுநிற்க, ஏமாப்பு என்பது செயப்படுபொருளன்மையால், உடைத்து என்பது செயப்படுபொருளை அவாய்நின்றதாயிற்று. அஃது அவாய்நின்றதென்பது 'உடைத்தம்வலியறியார்' என்னுங் குறளுரை யிற் பரிமேலழகர் உடைய என்பதற்குக் 'கருத்தாவாதலையுடைய' என்று சொற்கள்வருவித்துரைத்து 'உடையவென்பது அவாய்நின் றமையின் செயப்படுபொருள்வருவிக்கப்பட்டது' என்று இலக்கணம் விளங்க உரைத்தவாற்றானும் உணர்க.

ஆகவே, இக்குறைபாடெல்லாம் நீக்குதல்வேண்டி உரையாசிரியர் **பரிமேலழகர்** ஏமாப்பு என்பதற்கும் உடைத்து என்பதற்கும் இடை யிலே ஆதல் என ஆக்கச்சொல்வருவித்து ஐயுருபு விரித்துரைத்து முடித்தாரென்க.

சிதைவின்றியென்னும் செய்தெனெச்சக்குறிப்பிற்கும் முடிபும் உடைத்து என்பதற்குச் செயப்படுபொருளும் ஏமாப்பாதல் என்பது. அஃது ஒருசொன்னீர்மைத்து. இதனைக் 'கேளிழுக்கங்கேளாக்கெழு தகைமைவல்லார்க்கு' என்னும் குறளுரையிற் கெழுதகைமைவல்லார் என்பது ஒருபெயராய்க் கேளாதவென்னும்பெயரெச்சத்திற்கு முடி பாயிற்று என்று அவர் கூறியவாற்றானும் உணர்க.

ஆதலையுடைத்து என்பதும் ஒருசொன்னீர்மைத்தாம்.

ஏமாப்பு என்பதுபெயர். ஆக்கம் ஏமாப்பாதலையுடைத்து என் பது, சாத்தன் தலைவனுயினுன் என்றாற்போலநின்றது.

இம்முடிபுபற்றிப் பிரயோகவிவேகநூலாரும் உடனிகழ்கின்ற என் னும் சூத்திரவுரையுள் 'வடநூலார் தேவதத்தன் நெடியன், தேவதத் தன் ஒருவன் என்னும் தத்திதனேடும் எண்ணேடும் முடிவனவற்றை நெடியனுயினுன் ஒருவனுயினுன் எனச் சன்கொடுத்துக் காரகமாக்கு வர். 'ஆக்கஞ்சன்னென்றறைந்தனர்புலவர்' என்பது உரைச்சூத்திரம்' என்று கூறியவாற்றுனும், 'பிணையுங்கலையும்' என்னும் திருக்கோவையாரு ரையுட் பேராசிரியர் ஏகின் என்னும் வினையெச்சம் பணையுந்தடமுமா மெனவிரியும் ஆக்கத்தோடு முடிந்தது என்று கூறியவாற்றுனும் தெளிந்துகொள்க.

இவ்வாக்கச்சொல்லின் அருமைகருதிப்போலும் 'உயர்திணை யென்மனுர் மக்கட்சுட்டே' என்னும் சூத்திரவுரையுட் கல்லாடனுரும் சொற்பொருளையுணர்த்தும்வகைகளுள். ஆக்கவகையும் ஒன்றெனக் கூறிச் சாத்தன் தலைவனுயினுன் என உதாரணம் காட்டியதூஉமென்க.

அற்றே லஃதாக, அத்திருக்குறளுரையுட் பரிமேலழகர் ஆக்கச் சொல்வருவித்துரைக்கப்பட்டதென விளங்கக்கூறுமை யென்னையோ வெனின், அவர் ஆண்டுக்கூறிற்றிலரேனும் வேறுசிலகுறள்களினுரை யுள் விளங்கக் கூறிப்போந்தமையால் ஈண்டும் அஃது உய்த்துணர்ந்து கொள்ளப்படுமென்க.

'தமராகித்தற்றுறந்தார்சுற்றம்' என்னும் குறளுரையுள், சுற்றம் என்பதன்மேல் ஆதல் என்னும் சொல்லைவருவித்துப்பொருளுரைத்து 'ஆக்கம்வருவித்துரைக்கப்பட்டது என்று கூறினுர்.

'மன்னர்க்குமன்னுதல் செங்கோன்மை' என்னும் குறளுரையுள், செங்கோன்மை என்பதற்குச் செங்கோன்மையான் ஆம் என்று பொரு ளுரைத்து, ஆக்கம்வருவித்துரைக்கப்பட்டதென்று கூறினுர்.

'பசக்கமற் பட்டாங்கென்மேனி' என்னும் குறளுரையுள், பட் டாங்கு என்பதற்குப் பட்டதுபட எனப்பொருளுரைத்து பட்டாங் காக என ஆக்கம்வருவித்துரைக்கவென்று கூறினுர்.

'பகைநட்பாக்கொண்டொழுகும்' என்னுங்குறளுரையுள் 'வேண்டியவழிப் பகையைவேறுபடுத்துத் தனக்கு நட்பாகச்செய்துகொண்டு' என்று பொருளுரைத்து வேண்டியவழி என்பது ஆக்கத்தான்வந்தது. வேறுபடுத்தல் பகைநிலைமையினீக்குதல் என்று கூறியவாறும் அது பற்றி.

ஆசிரியர் சிவஞானமுனிவரும் சிவஞானபோதத்தில் 'அவனவளது வெனும்மவை' யெனும் முதற்சூத்திரவுரையிலே அவை சுட்டுப்பெயரெனக்கொள்ளின் உளவெனப்பிரித்துப் பயனிலையாக்கி ஆக்கச்சொல் வருவித்துக்கொள்க (உளவாம் என) எனவும், மூன்றாஞ் சூத்திரத்து 'அன்றன்றெனநின்று' என்னும் செய்யுளுரையிலே, 'அனைத்துநின்று' என்புழி ஆக்கச்சொற்றந்துரைக்க (அனைத்துமாய்நின்று) எனவும், ஏழாஞ்சூத்திரத்து 'அருவுருவந்தானறிதல்' என்னும் செய்யுளுரையிலே, அருவுருவாய் என்புழி ஆக்கம் உவமைப்பொருள் குறித்துநின்றது. 'ஆள்வாரிலிமாடாவேனோ' என்புழிப்போல' எனவும், எட்டாஞ்சூத்திரத்து 'அறிவிக்கவன்றியறியா' என்னும் செய்யுளுரையிலே (மாபாடியம்) முன்பின்னாகவென ஆக்கச்சொல்வருவித்துரைக்க எனவும், ஒன்பதாஞ்சூத்திரத்து 'நிர்க்குணனாய் நின்மலனாய்' என்னும் செய்யுளுரையிலே நிர்க்குணனாய்.........தற்பரனாய் என்புழி ஆக்கச்சொல் உண்மைகுறித்துநின்றது வடமொழிமதம், ஆனவறிவாய் என்புழி ஆக்கம் முன்னர்ச் சூனியம்போற்றோன்றுவோன் பின் ஆனவறிவாய்த்தோன்றுவான் என வேறுபாடுகுறித்துநின்றது எனவும், 'சுட்டியுணர்வதனை' என்னும்செய்யுளுரையிலே, தைவம்புணர்ந்ததனால் என்புழித் தைவமாயென ஆக்கச்சொல்வருவித்துரைக்க, உண்மைக்குத் தைவமாதல்புணரினென உருபுமயக்கமாகக்கொண்டுரைப்பினும் அமையும் எனவும், பத்தாஞ் சூத்திரத்துச் 'சார்ந்தாரைக்காத்தல்' என்னும் செய்யுளுரையிலே, தானாகச்செய்து என்புழி ஆக்கம் உவமவுருபின்பொருள் குறித்துநின்றது எனவும், பதினொன்றாஞ்சூத்திரத்து 'ஏகமாய்நின்றே' என்னும் செய்யுளுரையிலே போகமாய் என்புழிச் 'சேற்றுநிலமிதித்துச்சென்றானுக்கு வன்னிலம்போலப் பரபோகவிளைவு செயற்கைப்பொருளாய்நிற்றலின் ஆக்கமுங்காரணமும் அடுத்துவந்தது. 'செயற்கைப்பொருளை ஆக்கமொடுகூறல், ஆக்கந் தானே காரணமுதற்றே' என்பவாகலின், எனவும்,

சிவஞானசித்தியாரிலே 'ஒருவனோடொருத்தியொன்று' என்னும் செய்யுளுரையிலே, சித்துருமன்னி என்பதற்குச் சித்துருவாய்மன்னி யென ஆக்கச்சொல்வருவித்துரைக்க எனவும், 'சொன்னவித்தொழில்க ளென்ன' என்னும் செய்யுளுரையிலே துடைப்பது துடைப்பதாகவு மென ஆக்கச்சொல்வருவித்துரைக்க எனவும்,'எங்குந்தான்வியாபியாய்' என்னும் செய்யுளுரையிலே எல்லாம் எல்லாமாய் என ஆக்கச்சொல் வருவித்துரைக்க எனவும், மிக்கதொருபக்குவத்தின்' என்னும் செய்யுளுரையிலே, சீவன்முத்தராகி என்புழி ஆக்கச்சொல் உவமப்பொருள் குறித்துநின்றது 'ஆள்வாரிலிமாடாவேனோ' என்றாற்போல, எனவும், இவ்வியல்புவிளங்க விரித்துரைத்தார்.

இவ்வாசிரியர் சிவஞானமுனிவர் வடமொழியினும் தென்மொழியினும் மற்றெவரினும் அதிநுட்பமதியுடையார் என்பதற்கு மேற்காட்டிய அவர் உரைப்பகுதிகளே அமையுஞ் சான்றாதலுமறிக. மற்று அவர் தம் உரைநுட்பங்களை உள்ளவாறுணரமாட்டாதார் அவரொடு முரணிப் பலகூறி மயங்குப. அதுகிடக்க,

இவ்வியல்புபற்றிப் புறநானூற்றுரையாசிரியர்முதலியோர்கூறு மாறும் கண்டுகொள்க.

(இன்னும் வரும்.)

பிழைதிருத்தம்.

செந்தமிழ்த்தொகுதி 12.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
52	26	ஆக்கக்கிளவி	ஆக்கந்தானே
55	31	மாட்டெறிந்தவாறே	மாட்டெறிந்தவாறென்று

ம. நா. சோமசுந்தரம்பிள்ளை.

ரஸாயன நூல்.

CHEMISTRY.

"செந்தமிழ்" (தொகுதி-௧௮-பகுதி ௧௧-ல்) ௪௧௧-ஆம்பக்கத்தொடர்ச்சி.

அத்யாயம்—14.

கந்தகம்.

Sulphur.

[S]

1. **கந்தகம்,** கட்டிப்பொருள்வர்க்கத்தைச்சேர்ந்த ஒரு மூல பதார்த்தம். இது ஒரு பிறவிச்சரக்கு. இது, குச்சிக்கந்தகம் (Roll sulphur) என்று கட்டியாகவும், **பூக்கந்தகம்** என்று பொடியாகவும் இருவகையாய் அகப்படும். இது கரிகந்தநீரி(Carbon-di-sulphide)ற் கரையும். ஜலத்திற் கரையமாட்டாது.

2. **லக்ஷணங்கள்:**—கந்தகம் ஆக்ஸிஜனில் லகுவாய் எரிந்து **கந்தாக்ஸிஜம்** (Sulphur-di-oxide) ஆகும். அதேமாதிரி ஹைத்ரம், கரி, க்ளோரம் முதலானவைகளுடன் கந்தகம் கலந்து, முறையே ஹைத்ரோகந்தம், கரி-கந்தம், க்ளோரோகந்தம் என்னும் கந்தக்கலப்புகள் (Sulphides) உண்டாகின்றன.

3. **கந்தகமும் உலோஹங்களும்.** கந்தகம் பல லோஹங்களுடன் கலந்து அந்தந்த லோஹக்கலப்பு ஆகின்றது. தாம்ரத்துடன் சேர்த்தெரித்தால் **தாம்ரம் கந்தம்** (Copper sulphide) என்னும் கறுப்புப் பொருளும் அயத்துடன்சேர்ந்து, அயகந்த(Sulphide of iron)மும், அவ்வாறே வங்கம் **கந்தம்** முதலானவைகளும் உண்டாகின்றன.

(1) 2 வெள்ளி+கந்தகம்=வெள்ளிகந்தம்

$$2Ag+S=Ag_2S$$

(2) 2 தாம்ரம்+கந்தகம்=தாம்ரகந்தம்

$$2Cu+S=Cu_2S$$

(3) அயம்+கந்தகம்=அயகந்தம்

$$Fe+S=FeS.$$

கந்தக்கலப்புகளெல்லாம் நொறுங்கும் (Brittle) தன்மையுடையவை. ரஸத்துடன் பூக்கந்தகத்தைச்சேர்த்தரைத்தால், ரஸகந்தம் என்னும் கறுப்புநிறமான கல்பமுண்டாகும்.

குறிப்பு:—ரஸகந்தம் = ரஸம் + கந்தகம்

= லிங்கம்,

= Mercury sulphide,

= Cinnabar,

= Hg S,

கந்தாக்ஸிஜங்கள்.

(1) கந்தத்வயாக்ஸிஜம் (Sulphur-di-oxide = SO_2)

(2) கந்தத்ரயாக்ஸிஜம் (Sulphur-tri-oxide = SO_3).

4. (1) கந்தத்வயாக்ஸிஜம் என்பது 1 பங்கு கந்தகமும் 2 பங்கு ஆக்ஸிஜனுங் கலந்த ஒரு நிறமற்றவாயு. அதன்வாசனை மூச்சடைக்கத்தக்கது. தண்ணீரிற் கரையக்கூடியது. நோயாளிகளிருக்குமறைகளைச் சுத்தப்படுத்துவதற் குபயோகமானது.

செய்முறை:—மூடியபாத்திரத்திற் கந்தகத்தை ஆக்ஸிஜனுடன் எரிப்பதாலும், கந்தாமில(Sulphuric acid)த்தைத் தாம்ரத்துடன் சேர்த்துக் காய்ச்சுவதாலும் இவ்வாயு உண்டாகின்றது.

லக்ஷணம்:—கந்தத்வயாக்ஸிஜத்தைப் பனிக்கட்டியாற் குளிர்ச்சி செய்யப்பட்ட குழாய்வழியாய்ச்செலுத்தினால், அது த்ரவமாய்விடும். இன்னும் அதிகமாய்க்குளிர்ச்சிசெய்தாற் கட்டியாகவும் மாற்றிவிடலாம்.

குணம்:—கந்தத்வயாக்ஸிஜம், எரிக்கவாவது ப்ராணிகள் உட்கொள்ளவாவது உபயோகமில்லை. இதனால் புஷ்பம் முதலான தாவரவர்ணங்களைச் சலவைசெய்யலாம். வைக்கோல், பட்டு முதலான இளம்பொருள்களைச் சலவைசெய்யத் தொழிலாளிகள் உபயோகிக்கின்றனர்.

2 கந்தத்ரயாக்ஸிஜம்.

(Sulphur-tri-oxide.)

[SO_3]

5. கந்தத்ரயாக்ஸிஜம் என்பது 1 பங்கு கந்தகமும் 3 பங்கு ஆக்ஸிஜனும் கலந்துண்டாகும்வாயு. சாதாரணமாய், கந்தத்வயாக்ஸிஜத்தையும் ஆக்ஸிஜனையும் கலந்து எரிப்பதால் இது உண்டாகும்.

லக்ஷணங்கள்:—இது காற்றிலுள்ள நீராவியைக் கவர்ந்துகொள்ளக்கூடியதாகையால், இதைக் குழலில் அடைத்துவைத்திருக்கவேண்டும். இது தண்ணீரிற் சீக்கிரம் கரைந்து கந்தகாமிலம் (Sulphuric acid) ஆகின்றது.

ii. கந்தாமிலங்கள்.

(1) கந்தஜாமிலம் (Sulphurous acid = $H_2 SO_3$)

(2) கந்தகாமிலம் (Sulphuric acid = $H_2 SO_4$)

6. (1) கந்தஜாமிலம். கந்தத்வயாக்ஸிஜ(SO_2)த்தைத் தண்ணீரிற் கரைத்தால் இவ்வமிலம் உண்டாகும். இவ்வமிலத்தைக் காய்ச்சினாலும், வெளியேவைத்தாலும் மறுபடி இரண்டும் பிரிந்துவிடும்.

கந்தத்வயாக்ஸிஜம் + ஜலம் = கந்தஜாமிலம்.

$$[SO_2 + H_2O = H_2SO_3.]$$

2. கந்தகாமிலம்.

Sulphuric Acid.

$H_2 SO_4$.

7. செய்முறை :— கந்தத்ரயாக்ஸிஜ(SO_3)த்தைத் தண்ணீரிற் கரைப்பதால் இது உண்டாகும். முன்கூறிய கந்தஜாமில($H_2 SO_3$)த்தை, நைத்ராமிலப்புகையுடன் கலந்து அதிக ஆக்ஸிஜமாக்குவதாலும், கந்தகாமிலம் செய்யப்படுகின்றது.

கந்தத்ரயாக்ஸிஜம் + ஜலம் = கந்தகாமிலம்

$$SO_3 + H_2O = H_2SO_4.$$

குணங்கள்:-கந்தகாமிலம் தண்ணீருடன் லகுவாய்க்கலக்கின்றது. அப்பொழுது மிகுந்த உஷ்ணமுண்டாகின்றது.

உலோஹம்+கந்தகாமிலம்.

8. கந்தகாமிலம் பலவகை ரஸாயனச்சரக்குகள்செய்ய உபயோகப்படுகின்றது. பொதுவாக அநேக லோஹங்களுடன்கலந்து அந்தந்த லோஹ கந்தஜம் (Sulphate) உண்டுபண்ணுகின்றது.

தாம்ரம்+கந்தகாமிலம்=தாம்ரகந்தஜம்+ஹைத்ரம்.

$$[Cu+H_2\ SO_4=Cu\ SO_4+H_2.]$$

அல்லது, தாம்ரம்+2கந்தகாமிலம்=தாம்ரகந்தஜம்+ஜலம்+கந்தஜாக்ஷிஜம்.

$$[Cu+2\ H_2\ SO_4=Cu\ SO_4+2H_2O+SO_2.]$$

குறிப்பு:—தாம்ரகந்தஜம்=மைல்துத்தம்=Copper sulphate, நீலவர்ணமானது.

9. கறி உப்பு+கந்தகாமிலம்.

கறியுப்பும் கந்தகாமிலமும் கலந்தால் ஸோடியம் ஹைத்ரோகந்தஜமும், க்ளோராமிலமும் உண்டாகும்.

கறியுப்பு + கந்தகாமிலம் } = { ஸோடியம் ஹைத்ரோகந்தஜம் + க்ளோராமிலம்

$$[Na\ cl+H_2\ SO=Na\ H\ SO_4+H\ Cl]$$

குறிப்பு:—கறியுப்பு=ஸோடியம்+க்ளோரம்

க்ளோராமிலம்=ஹைத்ரம்+க்ளோரம்.

கந்தக்கலப்புகள்.

Sulphides.

(1) ஹைத்ரோகந்தம்.

Hydrogen Sulphide.

H_2S.

(10) ஹைத்ரோகந்தவாயு. இது 2 பங்குஹைத்ரமும் 1 பங்கு கந்தகமும்சேர்ந்த ஒரு கல்பவாயு. இது அதிகதுர்நாற்றமுடையதாதலால் இதை அபானவாயு என்றும் சொல்லுவதுண்டு.

செய்முறை. கந்தகத்தைக் குழலிலடைத்து அதனுடன் ஹைத்ர வாயுவைச்செலுத்திச் சுடவைத்தால் இவ்வாயு உண்டாகும். அய கந்தமுதலான கந்தக்கலப்புகளு(Sulphides)டன் க்ளோராமிலத்தைக் கலந்தும் இவ்வாயுவை உண்டாக்கலாம்.

உதாரணம் :—

நாககந்தம் +2 க்ளோராமிலம் } = { நாகக்ளோரம் +ஹைத்ரோகந்தம்.

$$ZnS+2Hcl=ZnCl_2+H_2S.$$

குணங்கள். ஹைத்ரோகந்தம் தண்ணீரிற்கரையும். அதை த்ரவ மாகவும் கட்டியாகவும் ஆக்கலாம். இது ஒரு விஷவாயு. சுடவைத்தால், ஹைத்ரமும் கந்தகமும் பிரிந்துவிடும். காற்றில் எரித்தால், தண்ணீரும், கந்தஜாமிலமும் உண்டாகும்.

ஹைத்ரோகந்தமும் க்ளோரமும்கலந்தால், கந்தகமும் க்ளோரா மிலமும் உண்டாகும்.

$$[H_2S+Cl_2=2HCl+S.]$$

ஹைத்ரோகந்தம் அநேகலோகங்களுடன் கலக்கும். அப்பொழுது ஹைத்ரம்பிரிந்து, மிகுதியுள்ளவை அந்தந்தலோஹ கந்தக்கலப்பு (Sulphides)களாகும். உதாரணம்:—

வங்கம்+ஹைத்ரோகந்தம்=வங்ககந்தம்+ஹைத்ரம்.

$$[Sn+H_2S=SnS+H_2]$$

நாகம்+ஹைத்ரோகந்தம்=நாககந்தம்+ஹைத்ரம்.

$$[Zn+H_2S=ZnS+H_2]$$

குறிப்பு—வங்கம்=Tin.

நாகம்=Zinc.

லோககந்தங்களில் அநேகம் தண்ணீரிற் கரையமாட்டா. பல வர்ணங்களுடையன.

கந்தக்கலப்பு, செய்முறைகள்.

11. (1) கந்தகத்தை நேரே அயம்முதலான மற்றமூலத்துடன் கலப்பது. உதாரணம்:—அயகந்தம், வெள்ளிகந்தம்.

(2) ஹைத்ரோகந்தமும் லோஹமும்கலப்பதால், ஹைத்ரம் பிரிந்து மற்றவை கந்தக்கலப்பாவது. உதாரணம்:—

வங்கம்+ஹைத்ரோகந்தம்=வங்ககந்தம்+ஹைத்ரம்.

(3) ஹைத்ரோகந்தத்துடன் காரப்பொருள்(Alkaline substances) கலந்து நிஷ்காரம் (Neutralization) ஆவதால் உண்டாவது.

உதாரணம்:—ஸோடியம் ஹைத்ராக்ஸிஜமும், ஹைத்ரோகந்தமும் கலந்தால், ஸோடியகந்தம் உண்டாகும்.

(4) உப்பும் ஹைத்ரோகந்தமும் கலந்தால், அவ்வுப்பிலுள்ள உலோஹம், கந்தகத்துடன்கலந்து அந்தந்த லோககந்தம் உண்டாகும். அது கசடாய்(Precipitates)த்தங்கிவிடும். உதாரணம்:—

(i) ஈயநைத்ரஜம்+ ஹைத்ரோகந்தம் } = ஹைத்ரோநைத்ரஜம்+ ஈயகந்தம்.

(ii) தாம்ரகந்தஜம்+ ஹைத்ரோகந்தம் } = ஹைத்ரோகந்தஜம்+ தாம்ரகந்தம்.

(iii) 2 வெள்ளிநைத்ரஜம்+ ஹைத்ரோகந்தம் } = வெள்ளிகந்தம்+ 2 ஹைத்ராமிலம்.

$$[2AgNO_3+H_2S=Ag_2S+2HNO_3.]$$

குறிப்பு. நைத்ரஜம் = Nitrate.

கந்தஜம் = Sulphate.

கந்தகஉப்புக்கள்.

Sulphur salts.

(1) கந்தஉப்பு (Sulphites).

(2) கந்தஜம் (Sulphates).

12. கந்தக உப்புக்கள் இருவகைப்படும். அவையாவன-(i)கந்தஜாமிலத்திலிருந்து உண்டாகும் உப்புக்கள், (ii) கந்தகாமிலத்திலிருந்து உண்டாகும் உப்புக்கள் என்பனவாம்.

13. (i) கந்தஜாமில உப்புக்கள் = கந்தஉப்புக்கள்.

(Salts from Sulphurous acid அல்லது Sulphites).

கந்தஜாமிலம் உலோஹங்களுடன்கலந்தால் அந்தந்தலோஹசம்பந்தமான உப்புக்கள் உண்டாகின்றன. உதாரணம்:—

சுண்ணம்+ கந்தஜாமிலம் } = { சுண்ணகந்தஉப்பு+ 2 ஹைத்ரம்.

அதாவது. $[Ca+H_2SO_3=CaSO_3+H_2]$.

(குறிப்பு. சுண்ணம் = Calcium = Ca.)

14. (ii) கந்தகாமிலஉப்புக்கள் = கந்தஜங்கள்.

(Salts from Sulphuric acid அல்லது Sulphates.)

(1) கந்தகாமிலமும் உலோஹங்களும்.

கந்தகாமிலம், பல உலோஹங்களுடன்கலந்து கந்தஜங்கள்(Sulphates)ஆகின்றது. உதாரணம்:—நாககந்தஜம் = (Zinc Sulphate).

நாகம் + கந்தகாமிலம் } = { நாககந்தஜம் + 2 ஹைத்ரம்.

$[Zn+H_2SO_4=ZnSO_4+H_2]$.

அல்லது

நாகம் + 2 கந்தகாமிலம் } = { நாககந்தஜம் + 2 ஜலம் + கந்தத்வயாக்ஷிஜம்

$[Zn+H_2SO_4=ZnSO_4+2H_2O+SO_2]$.

குறிப்பு—நாகம் = Zinc = Zn.

நாககந்தஜம் = Zinc Sulphate = பால்துத்தம் என்றும் சொல்லுவதுண்டு.

தாம்ரகந்தஜம்.

Copper Sulphate.

$[Cu\ SO_4]$

தாம்ரம் + 2 கந்தகாமிலம் } = { தாம்ரகந்தஜம் + 2 ஜலம் + கந்தத்வயாக்ஷிஜம் (SO_2)

குறிப்பு—தாம்ரகந்தஜம் = மைல்துத்தம் என்றும் சொல்லப்படும்.

கந்தஜங்களிற்சில:—

பால்துத்தம் = Zinc sulphate = $ZnSO_4$.

மைல்துத்தம் = Copper sulphate = $CuSO_4$.

அன்னபேதி = Iron Sulphate = $FeSO_4$.

சீமை இந்துப்பு = { Magnesium sulphate அல்லது Epsom salt } = $MgSO_4$

15. கந்தகாமிலமும் ஆக்ஸிஜமும்.

ஆக்ஸிஜ(Oxide)த்துடன் கந்தகாமிலத்தைக்கலந்தும் கந்தஜங்கள் செய்யலாம். உதாரணம்:—

நாகாக்ஸிஜம்+கந்தகாமிலம்.

=நாககந்தஜம்+ஜலம்.

$$[ZnO+H_2SO_4=ZnSO_4+H_2O]$$

குறிப்பு—நாகாக்ஸிஜம்=Zinc oxide=ZnO.

16. சுருக்கம்.

i. கந்தகம் (Sulphur=S).

ii. கந்தகம்+ஆக்ஸிஜன்.

(1) கந்தத்வயாக்ஸிஜம் (SO_2).

(2) கந்தத்ரயாக்ஸிஜம் (SO_3).

iii. அமிலங்கள்.

(1) கந்தஜஅமிலம் (Sulphurous acid=H_2SO_3).

(2) கந்தகாமிலம் (Sulphuric acid≈H_2SO_4).

iv. கந்தகம்+ஹைத்ரம்.

=ஹைத்ரோகந்தம் (Hydrogen sulphide=H_2S).

v. கந்தகக்கலப்புகள் (Sulphides).

=கந்தகம்+ஏதாவது ஒருமூலம்.

vi. உப்புக்கள்.

(1) கந்தஉப்பு (Sulphites).

(2) கந்தஜங்கள் (Sulphates).

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர். B.A., B.L.

இராமநாதபுரத்தில்

இராசாதி ராஜ முத்துவிஜயரகுநாத

ராசராசேசுவரமுத்துராமலிங்கசேதுபதிமன்னரது

அரமனையிற்கூடிய கரு-ம் வருட மகாசபையிற் படிக்கப்பட்ட

மதுரைத்தமிழ்ச்சங்க மங்கலவாழ்த்து.

இது

யாழ்ப்பாணத்துச் சுன்னுகம் வித்வான்

ஸ்ரீமத்- அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் இயற்றியது.

வெண்பா.

சங்கப் புலவரொடுந் தாமொருவ ராயிருந்து
துங்கத் தமிழ்புரந்த சொக்கேசர்—செங்கமலச்
சேவடியைச் சிந்திப்பாஞ் செந்தமிழ்சேர் சங்கமிது
பூவுலகி லோங்கும் பொருட்டு.

விருத்தம்.

பூவரசு தொழுமரசு ராம நாதப் புரவரசு தமிழரசு புகழ்போ யெங்குந்
தாவரசு ராசரா சேசு ரப்பேர்த் தனியரசு தமிழ்வளர்க்கு மூரிமை யெல்லாம்
மேவரசு மதுரைநகர்த் தமிழ்சேர் சங்க வியனரசாய் வீற்றிருக்கு மேன்மை தந்த
தேவரசு நான்மாடக் கூடன் மேவுந் திருவிளையாட் டரசுபதஞ் சென்னி வைப்பாம்

கட்டளைக்கலித்துறை.

துங்கங் கெழுராச ராசே சுரத்துரை தொன்மதுரைச்
சங்கம் புரப்பவ னுயினன் கேளுந் தமிழ்ப்புலவீர்
சங்கம் வளருந் தமிழ்நூல் வளருந் தமிழ்ப்புலவர்
அங்கம் வளருந் தமிழும் வளரு மசைவில்லையே.

விருத்தம்.

ஆதிமறை யாகமநூன் முகில்கள் வாழி
அந்தணரா தியர்வாழி பசுக்கள் வாழி
தாதையொடு மூதாதை முதலோர் போலத்
தமிழ்வளர்க்குங் கடப்பாட்டிற் றனக்கொப் பில்லாச்
சேதுபதி ராசரா சேசு ரப்பேர்ச்
செகபதியு மகிதலத்திற் சிறந்து வாழி
தாதவிழும் பொழின்மதுரைச் சங்கம் வாழி
தமிழ்ப்புலவர் குழுவொடுசெந் தமிழும் வாழி.

நாநாதேசவிவாகமுறை.

இந்துதேசத்தில், பிரம, க்ஷத்ரிய, வைஸ்ய சூத்திரர்கள், பிரமம், முதலிய பலவகைமணங்களை அநுஸரித்துவருவது, யாவருமறிந்ததே. இவ்வழக்கங்களினால், இந்துதேசத்து நாகரிகமும் பெருமையும் இற்றென எவரு மறிந்துகொள்ளக்கூடியதாயிருக்கிறது.

நாகரிகமுதிர்ந்தும், பாதிமுதிர்ந்தும், முதிராமலுமிருக்கும் மேனாட்டுவழக்கங்கள்பல்வற்றை அறிவதிலிருந்து, பலபாஷைகள் பேசும் பலஜாதியாருள்ளும் எவ்வாறு நாகரிகமும் பெருமையும் முதிர்ந்திருக்கிறதென்று தெரிந்துகொள்ளக்கூடியதாயிருக்கிறது.

இவ்வாறு பூமியிலுள்ள பலஜாதியாருள்ளுமிருக்கும் பழக்க வழக்கங்களை, நன்கு ஆராய அவர்களுள், "பெண்கள் மணம்புரிவதில் வழங்கும் பழக்கங்கள்" சிலவற்றை எடுத்துச்சொல்வோம். இவ்வழக்கங்கள் அவ்வந்நாட்டார்களுள், ஸஹஜமாயிருப்பினும் இந்தியர்போன்ற சிலர்களுக்கும், ஐரோப்பியதேசவாசிகளுக்கும் தங்களுள் முற்றும்வேறுபட்ட விநோதமாய்ப்படுமாகையால், அவைகளிற் சிலவற்றையே இங்கெடுத்து விவரிப்போம்.

பிஜியத்தீவிலுள்ள பீஜியனொருவன் (A. Fijiam) மேனாட்டு ஐரோப்பிய கீழிந்தியகலியாணவழக்கங்களைச் சாஸ்திரத்திற்கு ஒத்தவை என்று அறியாமல், தன்னுடைய தேசவழக்கத்திற்கு விரோதமானவை என்று நினைக்கிறான்.

புன்சிரிப்பும், நகைப்புப்பருவமும்கொண்ட ஸந்தோஷமான காலம் ஸ்த்ரீஜாதிகளின் இளமைப்பருவம் என்பதும், ஒத்தாசையில்லாமற் கண்ணீர் ஒழுக்குடனும், வேலைத்தொந்தரவுடனும்கூடியது அதன்பின் மணக்கும்பருவமென்பதும் பிஜியத்தீவார்கொண்டிருக்கும் அபிப்பிராயமென்று அவர்களுடைய தேசசரித்திரம் கூறுகின்றது. நாகரிகம்மிகுந்த மேற்றேயத்தார் அத்தேசத்தின் சிலபாகங்களிற்போய், இம்மாதிரியான எண்ணத்தை அவர்களினின்றும் ஒழிக்கமுயன்றும் அவ்வெண்ணம் அவரினின்றும் இன்னும் நீங்கினபாடில்லை. மனிதர்கள் தம்மினத்தவர்களையே அடித்துத் தின்று

கொண்டிருந்தகாலந்தொட்டு, இக்காலம்வரையிலும் (பிஜியத்தீவு பிரிட்டிஷ்காலனியாக (British Colony) மாறியபிறகுங்கூட) பழுப்பு நிறங்கொண்ட பிஜியப்பெண்களை இளம்வயதிலேயே மணம்புரிவிக்கிறதென்கிற வழக்கம், பழக்கத்திலிருக்கிறது. இப்போதுகூடக் கைக்குழந்தைகளுக்கு இத்தீவில் மணம் நடந்தேறிவருகிறதாகத்தெரிகிறது. எவ்வளவுக்கெவ்வளவு பெண் வயதிற்குறைந்தவளோ அவ்வளவுக்கவ்வளவு புருஷன் வயதில் மூத்தவனாயிருக்கவேண்டுமென்பது, அந்நாட்டுத் தாம்பத்தியத்தையநுஸரித்த விதியாயிருக்கின்றது போலும்.

பிரிட்டிஷார், பிஜியத்தீவைக் கைக்கொண்டிருக்கும் இக்காலத்தில், கவர்ன்மெண்டார் இத்தீவாரின்கலியாணவிஷயங்களிற்குறுக்கிட்டுச் சிலநிபந்தனைகள் ஏற்பாடுபண்ணியிருக்கிறார்கள். ஒருவன் தான் கலியாணம்பண்ணிக்கொள்ளநினைக்கும்பெண்ணுக்கு ஒருவீடு ஸம்பாதித்துவைத்தபின்னரே அப்பெண்ணைப் போய்ப் பார்க்கலாம். பழையகாலத்திய வழக்கப்படி கலியாணம்செய்துகொள்ளுமுன்னுற் செய்யும் கார்யங்களைச்செய்ய இடம்பெறுகிறான். இவ்வாறு செய்தபின் இம்மணமகன், தன்தேகமாதியந்தம் தேங்காய் எண்ணெயைத்தடவிக்கொண்டு, தன்தலையைக்கோதிச் சொருக்கிட்டுப் பெரிதாகக்கட்டிக்கொண்டு பெண்ணின் தந்தைவீட்டுக்குக் காட்டுத்தனமான பழையவழக்கத்துடன்போய்ப் பெண்ணின் தகப்பனிடத்துத் திமிங்கிலத்தின்பல்லொன்றோ, பாயோ, வஸ்திரமோ கொடுத்து, அவன்பெண்ணைத் தனக்கு மனைவியாகக்கொடுக்கக்கேட்கிறான். பெண்ணைக்கொடுக்கத் தந்தை இசையும்பக்ஷத்தில் அப்பெண்ணினை அநேகமங்கலஸ்திரீகள்சேர்ந்து, புருஷன்வீட்டுக்கு அழைத்துப் போவார்கள். அங்கு அந்த ஸ்திரீகள் வஸ்திரமோ, பாயோ, திமிங்கிலப்பல்லோ பரிசாகப்பெறுகிறார்கள். இந்தப்பெண், தன்மணமகன்வீட்டுக்குப்போனதும் தன்ஜாதிவழக்கப்படி அழுவாள். இந்த அழுகையில் பிஜியஜாதிஸ்திரீகள் மிகுதியும் பேர்போனவர்கள். இந்த அழுகையை அநேகஸ்திரீகள்சேர்ந்து, ஸமாதானப்படுத்தி நிறுத்தி, அவளுக்குச் சிலபரிசுகளும், அளிக்க, அழுகை நின்றுவிடும். போதியகாலம்சென்றவுடன் அவள் தன்னுடைய ஸ்வயநிலையையடையும்படியான கண்ணீர்துடைப்பதைச்செய்துகொள்கிற

ஸம்ப்ரதாயத்தையே, (Vakamamaca) வகமாமகா என்று சொல்வது, அந்நாட்டாரின் வழக்கம். பிஜியஜாதிப்பெண்களை, அவர்களுள் தலைவர்களுக்காவது அவர்களைச்சேர்ந்த பந்துவர்க்கத்தவர்களுக்காவது கொடுக்க நிச்சயம்செய்யப்பெறின், அவ்வாக்குத்தத்தம் தவறினால், அத்தவறுதலுக்காகக் கடுமையானதண்டனை விதிக்கப்பெறுதலுண்டு. அதனால், அவர்கள், அப்படிப்பட்ட வாக்குத்தத்தத்தினின்றும் தவறுவதில்லை.

பெண், தன்கணவன்வீட்டுக்குப்போய்க் கண்ணீர்துடைக்கும் ஸம்ப்ரதாயத்தை அநுஷ்டித்தபிறகு தன்னுடையகணவனாலமைத்து வைக்கப்பெற்ற ஆஹாரத்திற் பங்குபெறுவதுண்டு. இதன்பின் அப்பெண் மஞ்சளை முகத்திற்பூசிக்கொண்டு மூன்றுநாள் தன் கணவன் வீட்டிலிருக்கிறாள். அப்போது, அவளிடத்தில், பெண்மக்கள் மட்டுமே அணுகிப் பேசமுடியும். இதன்பிறகு, இப்பெண் ஸமுத்ர ஸ்நாநம்செய்து தன்னுடைய தோழிகளுடன் கூடிக்குலாவிப் பேசிச் சிரித்து விளையாடிப் பின் சிறிது மீன்பிடிக்கிறாள். பிஜியச்சிறுமிகள், மீன்பிடிப்பதிற் கைதேர்ந்தவர்கள். மீன்பிடித்துத் தன்கணவனுக்கும் அவனுடைய நண்பர்களுக்குமுபயோகமாகுமாறு, இப்பெண் அன்று தானே சமயல்செய்கிறாள். சமயல்முடிந்துசித்தமானபின் பெண்ணின் கணவன், தான் முதன்முதல், தன்னுடையமனைவியின்முன்தோன்றின தேங்காயெண்ணெய்பூசியகோலத்துடன் தன்னுடையநண்பர்களுடன் செல்ல இதுவரையில் இருவரும்பூண்டமணக்கோலத்தை மிகவுமெளிதில் மாற்றுகிறார்கள். அப்போதே இம்மணமகள் தன்வீட்டலுவல்களைப்பார்க்க ஆரம்பிக்கிறாள். தன்னுடையகணவனுக்கும், அவனைச்சேர்ந்தவர்களுக்கும், அவள் அன்றையதினம் உணவு அளிக்கிறாள். பின் சிலநாள்கள், உபவாஸமிருந்து, அவர்கள் தாம்பத்தியத்தை ஒழுங்காய் நடத்துகிறார்கள். இதே பிஜியத்தீவார் கலியாணவிஷயத்தில் அநுஸரிக்குமுறை.

அரபியாதேசத்தில் விதவைகள் மறுமணம்புரியும்போது, அநுஸரிக்கும் விநோதமானமுறை கவனிக்கத்தக்கது. அராபியவிதவை மற்றொருவனை மணம்புரிய நிச்சயித்திருக்கும் முந்தைநாளன்றிரவு, தன்னுடைய இறந்தகணவனுடைய கல்லறைக்குப்போகிறாள்.

அங்குச்சென்று அவன் தன்மேல் அஸூயைகொள்ளாதிருக்குமாறும், மனம்நோகாதிருக்குமாறும், ஸமாதியிலிருக்கும்புருஷனை மன்றுடி, முழங்காலிட்டு வேண்டிக்கொள்கிறாள். தன்செயலுக்காகத் தன் கணவன் ஒருவேளைகோபிப்பானோ என்னும் கவலைகொண்டு, பயமுற்றவளாகையால், அவனுடைய கோபசமனார்த்தம் தன்னுடன் கழுதைமேல் நீர்ச்சித்தையில் நீர்கொண்டுபோய், அதனைத் தன்னுடையவேண்டுகோளுக்கப்புறம் அவன்ஸமாதிமேலூற்றி நனைக்கிறாள்.

நியூகினிக்கு(New Guinea) உத்தரபாகத்திலிருக்கும் இயற்கைவனப்பிற்சிறந்த நியூப்ரிடன் (New Britain) என்னும் பெருந்தீவில், நரமாம்ஸபக்ஷணிகள் நிறைந்திருக்கிறார்கள். அத்தேசத்தவர்களுள் நடக்கும் கலியாணமுறை, கவனிக்கத்தக்கது. இத்தீவின் ஸ்வதேசி, தான் தனிமையாயிருந்து காலங்கழிப்பதில் அலுப்புற்றானால் ஒரு பெண்ணைக் கலியாணம்செய்துகொள்ளநினைக்கிறான். தன் எண்ணத்தைத் தன்னுடையநன்மையைக்கோரின தன் தந்தைக்கோ, தாய்க்கோ, தெரிவிக்கிறான். தாய்தந்தையற்றவன், தான்மணக்க விரும்பிய பெண்ணைப்பற்றித் தன் தலைவனுக்குத்தெரிவிக்கிறான். அப்படித் தெரிவித்ததின்மேல் அவன் மாங்களடர்ந்தபுதருக்குள், பிரவேசிக்கிறான். ஊரிலுள்ள அவனுடைய சிநேகிதரையுள்ளிட்ட எல்லோரும் அப்பெண்ணின்வீட்டிற்குச்சென்று அப்பெண்ணின்தாயாருக்குத் தாம்வந்தகருத்தைத்தெரிவித்துத் தாம் பெண்ணின்பொருட்டுக் கொடுக்கவிருக்கும் கிரயப்பொருளையோ, பரிசையோ தெரிவிக்கிறார்கள். கீழ்நாட்டு அடிமைவ்யாபாரத்திலுள்ள கிராக்கிகளெல்லாம் காட்டப்பெற்றுக் கடைசியிற் பெண்ணின்பெற்றோர் தாம்விரும்பியபடி பரிசுவிஷயத்தைப்பற்றி ஏற்பாடுசெய்துகொள்ளுகிறார்கள்.

கலியாணதினத்தன்று மணப்பெண் தன்னுடையதாதிகள் பந்துவர்க்கத்தார்புடைசூழத் தான்மணக்கவிருக்கும் மணமகன்வீட்டிற்குப்போய் அங்கே இவர்கள்யாவரும், மிருஷ்டான்னபோஜனம் பண்ணுகிறார்கள். விருந்துண்டிமுடிந்தபிற்பாடு, அங்குப் பெண்களெல்லாம்சேர்ந்து கும்மியடிக்கும் ஆட்டம்நடத்த, அந்நடனத்தில் இம்மணப்பெண் ஒருமுக்கியமான நடனஞ்செய்வாள். இந்நடனம் முடிவானதும், பெண்ணைச்சேர்ந்தவர்கள்யாவரும் மணமகனை

அங்குவிட்டுத் தத்தம்வீடுசேருகிறார்கள். இக்காலங்களிலெல்லாம் மணமகன்சென்ற காட்டின்புதரிற்போ யவனைவரவழைப்பதற்கு மனிதர்கள் செல்லுகிறார்கள். காட்டிற்போ யவன் தனிமையைசஹியாது, அக்காட்டில் இங்குமங்கும் அலைந்து கடைசியிற் காட்டின் உட்பாகத்தில் தன்னையறியாமற்சென்று அங்குள்ள துஷ்டமிருகங்களாகிய சிங்கம், புலி, சிறுத்தை முதலிய ஜந்துக்களுக்காவது தன்னைப்போலொத்த காட்டுமனிதனுக்காவது இரையாவதுமுண்டு. அநாகரிக ஜாதியாரின் இக்கலியாணவழக்கம், பிராணஹானியில் முடிவதுமுண்டு. க்ஷேமமாய் நாடுவந்து அம்மகன் தான் இச்சித்த பெண்ணை மணப்பதுமுண்டு.

இச்சாதியார் மனைவியைக் கணவனுடையஸொத்தே என்று மதித்து, அவளுடைய உயிர்மேலும் கணவனுக்கு அதிகாரம் கொடுத்திருக்கின்றார்களாம். ஒரு ஜாதி விட்டு, மற்றொருஜாதியில் மணந்துகொள்ளுவதைப்பற்றி, இத்தேசவாசிகளுள், கண்டிப்பான சட்டதிட்டங்களுண்டு. இத்தீவாரில், ஒவ்வொரு ஜாதியிலும் இரண்டுபிரிவுண்டு. அவ்விருபிரிவில், ஒருபிரிவிலிருப்பவன் அதே பிரிவிலிருப்பவரோடு ஸம்பந்தம்செய்துகொள்ளக்கூடாது. பொதுவாய், அத்தீவின் ஆண்பிள்ளைகள், தம்மினின்றும், அந்நியஜாதிப் பெண்களைத் திருடியோ, விலைக்குவாங்கியோ, மணம்செய்துகொண்டுவிடுகிறார்கள். கலியாணம்செய்யும்வயதுவந்தபெண்ணின் விலை இரண்டுபங்காகிறது. அப்பெண்ணின் தாய்தந்தையருக்குக் கொடுப்பது, ஒருபங்கு. அச்சாதியின் தலைவனின் அநுமதிக்காக அவனுக்குக்கொடுப்பது மற்றொருபங்கு. ஜாதித்தலைவன் அநுமதியின்றிக் கலியாணம்நடைபெறுவதேயில்லை. ஜாதித்தலைவன் அநுமதியின்றிக் கலியாணம்செய்துகொள்ளும்பெண்ணின்தலைவன், அத்தேசவாசிகளின் சட்டப்படி தன்தலையை இழப்பான்.

பெண்களுக்குப் பணங்கொடுத்து மணம்புரிவதென்பது, க்ளோவிஸ் (Clovis) காலம்முதல் நடைபெற்றுவருகிறது. க்ளோவிஸ் க்ளாத்லிட் (Clothilde) என்னும்ராணியை மணந்தபோது, அப்பெண்மணிக்காகச் சிறிது தனம்கொடுத்தான். ஆகையால், அன்று முதல் இன்றுவரையில், பிரான்ஸ்தேசத்தில் அம்மாதிரி பெண்களுக்குப் பணங்கொடுப்பது, வழக்கத்தையொட்டியது என்றுவழங்குகிறது. ஆனால், ஸம்பந்திகளின் ஏற்றத்தாழ்வான அந்தஸ்தைப் பொறுத்து, அவர்களுள், கொடுத்துவாங்கும் பணத்தொகையின் அளவு ஏற்படுகிறது.

முன்காலத்தில் இம்மாதிரியானவழக்கம், இங்கிலாந்திலும் இருந்துவந்தது. மணமகளோ தனக்காகக்கொடுக்கவிருக்கும்பணத்தைவாங்கத் தன் முதுகிற் சித்திரித்த அழகான பணப்பையைத் தாங்கிப்போவாள். அப்பை மணமகளைச்சேர்ந்தவர்களாற் கொண்டு போகப்படுவதுமுண்டு. இதனையே சீதனமுட்டை என்று சொல்லுவது. (Dow purse = Dowry) இம்மாதிரியான சீதனம் நாட்டுப் பாகங்களில் இன்னும் வழக்கத்திலிருந்துவருகிறது. இதனுலேயே ஸ்திரீகள், தம்முடைய பெற்ருேர்களிடமிருந்தும் பெறும் தனத்தையோ, நகையையோ சீதனம் என்கிருர்கள்போலும்.

இத்தீவில் பெண்கள், எப்போதும் புருஷர்கண்ணில் படுவதில்லை. இவர்கள் உடுக்கும் உடை கீழ்நாட்டையொத்ததுதான். துருக்கியிலும் ஆர்மீனியாவிலும் பெண்கள் புருஷர்கள்பார்க்க வெளியில்வராமலிருப்பதுதான் தேசாசாரம். தம் தேகாத்யந்தம், ஸ்திரீகள் போர்வைபோர்த்து, மூடிக்கொண்டுவிடுவதனுல் அவர்களின் கிட்டினபந்துக்கள்கூட அவர்களின் அலங்காரங்களைப்பார்க்கமுடிவதில்லை. மணமகனுகநிச்சயிக்கப்பட்டவன்கூடத் தாலிகட்டும்வரையில் தன் மனைவியைக் கண்ணெடுத்துப்பார்ப்பதுகூட இல்லை. இம்மாதிரியானபோர்வையினுற்போதரும் பயனைப்பற்றி, ஒரு சிரிக்கத்தக்க கதைசொல்லுவதுண்டு.

[ஒருவன் தன்மனைவியைப்பார்த்து "ஏ! பெண்ணே நீ உன்இஷ்டப்படி உலகத்திலுலாவலாம் என்று நான் உனக்கு உத்தரவு கொடுத்துவிட்டேன்" என்றுசொல்ல, தன்மனைவியைப்பார்த்து அவன் அப்படி ஏன்சொன்னுன் என்று பிறர்சங்கிக்க அவள் அழகாயிராததனுல் அவளைவிரும்பத் தனக்கு மனமில்லையென்ருனும். இதனுல் அழகுள்ளபெண்கள் தம்கணவனன்றிப் பிறர்தம்மைப் பாராதிருக்குநிமித்தமாகத் தம்மை மறைத்துவைத்துக்கொள்வதற்கென்றே இப்போர்வை ஏற்பட்டிருக்கின்றதென்று தோன்றுகிறது.]

துருக்கியரின்கலியாணவழக்கம் ஆராயத்தக்கது. மணமகளுக்குரிய பொருளையும் மணமகனுக்குரிய வருமானப்பொருள்களெல்லாவற்றின்நிலையையும், பத்திரமொன்றில்வரைந்து ஸம்பந்திகளிருவரும் கையெழுத்திட்டு, மற்றும் நண்பர்கள் கையெழுத்திடக் கலியாணம்

முடிவுபெறலாகும். ஒரு துருக்கியன் நியாயப்படி, நாலுமனைவியரை யும் அடிமைப்பெண்களில் நால்வர்வரையிலும் மணம்புரியச் சட்ட மிருக்கிறதாம். தன்னுடையமனைவிக்குச் சீதனமாகப் பொருள்கொ டுக்கக் கணவன்கடமைப்பட்டவனாயினும் அது பெற்றோர்களின் இஷ் டத்தைப் பொறுத்திருக்கிறதாம். கலியாணத்திற்குமுந்திப் பெண் ணின்பெற்றோருக்குக் கணவனால், சீதனமாகச் சிறிது திரவியம், கொடுக்கப்படுகிறதாம். இத்திரவியம், கலியாணச்செலவில் உபயோக மாகிறதாம். அதிற் சிறிதுபாகம், பெண்ணின்தோழிகள்பெற்றுச் சிலநிபந்தனைகளின்பேரில் வைத்துக்கொள்வார்களாம்.

இத்தேசத்தில் மணமகள் கலியாணத்திற்குமுந்தி ஸ்நாநம் செய்யப்போம்போது ஒரு அபூர்வமானவழக்கம் அநுஷ்டானத்தி லிருக்கிறது. முன்னால்தீவட்டிகள் வரிசையாய்ச்செல்ல மணமகள் தன்தலைமயிரை ஒருவாறுகட்டிக்கொண்டு, வீதியிற்செல்லுகிறாள். கலியாணதினத்தன்று மணமகன் மணமகள்வீட்டிற்குச் சிலரை அனுப்பி, அப்பெண்ணினைச்சேர்ந்தவற்றையெல்லாம் எடுத்துப் பகிரங்கமாய்த் தன்வீட்டிற்குக் கொண்டுவரும்படிசெய்ய, மண மகளும், தன்னுடைய பந்துவர்க்கத்தவரும், தன்னுடையஸாமான் வண்டியும் பின்தொடரத் தன் புக்ககம்புகுகிறாள். அப்போது அந்த ஊர்கோலத்திற் கலந்தவர்களில் அவளுடைய கிட்டின உறவி னர்பலரும் துக்கக்கோலத்தைக்கொள்கிறார்கள். ஜெப்தாவின்பெண் விஷயமாய் (Jeptha's Daughter) க்கொண்ட துக்கக்கோலம், பைபி ளில் (Biblical allusion) இருப்பது, இங்குக் கவனித் தமைத்துக் கொள்ளத்தக்கது. இப்பெண்மணி, புக்ககம்செல்லும் ஊர்கோலத் தில், தான்கண்ட எவரையும் தலைகுனிந்து வணக்கம்செய்து, மரி யாதைசெய்துசெல்லவேண்டும். இச்சமயமே பிறரைப்பார்த்து, இவள் தன்வணக்கத்தைக்காட்டும் ஸமயம். கலியாணநியாயங்களில், துருக்கியில், மற்றொருவிதமுமுண்டு. அவர்கள், இறந்தவர்களைக்கூடக் கலியாணம்செய்துகொள்வதுண்டாம், ஜீவதசையிலுள்ள தன்மனைவி யின்சகோதரிகளைக்கூட, ஒருபுருஷன் கலியாணம்செய்துகொள்ளலா மாம். ஆனால், அவர்களில் மூத்தவள்முதலாக, வரிசைக்கிரமமாய் மணக்கவேண்டும். ஒரு புருஷன் இளையவளைமணந்திருப்பானாயின், அவன் அந்தவம்சத்தில், வேறுபெண்ணை மணக்கக்கூடாது.

ருஷியாவிலும் ஒருஅதிசயமான வழக்கம் விவாககாலத்தில் அநுஷ்டானத்திலிருந்துவருகிறது. கிராமாந்தரகலியாணங்களில், மணப்பெண்கள் கலியாணத்தின் உறுதிப்பாட்டிற்குக் கோயிலுக்குப் போய்வந்ததும் தங்களுடைய அழகிய சுருட்டைமயிரின்பாகங்களிற் சிறிது துண்டித்துவைக்கிறார்கள். அத்தேயத்தினர், அம்மாதிரி துண்டிக்கப்பட்டதற்காக ஒரு துக்கப்பாட்டுப்பாடுகிறார்கள். பொன் மயமான வளைவான மயிரின்பாகம் வெட்டுண்டு பிரிக்கப்பட்டதாக ஒருதுக்கப்பாட்டைப் பாடுகிறார்கள். கலியாணகாலத்தில் ஆசார்யர், கோயிலில் ஒரு ரொட்டியை ஓதிக்கொடுக்கிறார். அவர்கள் இருகை களையும் சேர்த்து, ஒருமித்து, எப்போதும் ஸுகமாய் ஜீவிக்கவும், வீட்டைச்சேர்ந்தகாரியங்களை ஒழுங்காய்க்கவனிக்கவும் உபதேசிக் கிறார். கலியாணம் பண்ணிக்கொண்ட சுகமானகாலங்களிலும் துக்கம் ஸம்பவிப்பது ஸஹஜம். துக்கம்கலவாத ஸந்தோஷமில்லையென்றதை ஸூசிப்பிக்கும்படியான மாலையொன்றினையும், அவர் அத்தம்பதி களுக்கு அணிவிக்கிறார். கடைசியாக ஒரு நல்ல ஆசீர்வாதம்செய்கிறார். பிறகு ஆசார்யர், அத்தம்பதிகளின்க்ஷேமத்தின்பொருட்டு, ஒரு அழ கியமரப்பாத்திரத்திலிருந்து, திரவப்பொருள் ஒன்றினை அருந்துகிறார். இம்மாதிரியே தம்பதிகளு மருந்தியபின் கணவன், தன் பாத்திரத்தைத் தன் காலின்கீழ்ப்போட்டுமிதித்து, "எங்களிருவருள்ளும் துன்பத்தை யும், மனஸ்தாபத்தையும் வருவிப்பவன் இக்கதியாகுக" என்று சொல்லி உடைக்கிறான். இப்படிக் கலியாணம்முடிந்து, தம்பதி கள் வீட்டுக்குப்போனதும், கணவன், தன்மனைவியைத் தன்காற் (Boots)செருப்பைக் கையிலெடுக்கச்சொல்லி, "ஒரு கையிற் சாட்டை யும், மற்றொருகையிற் பணமும் இருக்கின்றது" என்று சொல்லுகி றான். இதிலிருந்து, அவன்மனைவி "அணைக்க ஒருகை, அடிக்க ஒரு கையுள்ளது"; ஆதலின், ஜாக்கிரதையாயிருந்து குடித்தனம் செய்ய வேண்டியது என்று அறிந்துகொள்ளவேண்டும் போலும். இம் மாதிரியாய் ருஷியாதேசத்தின்வழக்கம் இருக்கின்றது.

ஸ்வீடன்தேசத்துக் கலியாணவழக்கம் ஒருவிதமானது. மண மகள், மணமகனின்முன்னால், தன்வலதுகாலைக் கோயிலின் பலிபீடத் தின்மீதுவைத்தால், சீக்கிரத்தில் அவள் உன்னதஸ்திதிக்குவருவாள் என்பது, ஸூசகமாகும். கலியாணதினத்தன்று, கணவன் பார்க்கு

முன்னரே அவனை மணமகள் முதலிற்பார்த்துவிட்டால், கணவனின் அத்யந்தப்பிரியத்திற்குப்பாத்ரமாவாள் என்பதும், அந்நாட்டாரின் கொள்கை.

யூததேசத்து (Jewish Custom) வழக்கம், தம்பதிகள் இருவரும் கலியாணதினத்தன்று ஒரேபாத்திரத்திற் பானமருந்துவதும், அதனை உடனே, உடைப்பதுமாம். அப்படி உடைப்பதுவே இப்புன்மையான உலகின் ஸுகஸௌக்கியங்களெல்லாம், நிலையற்றன, அழிந்துவிடத்தக்கன என்பதைக்காட்டுமாம்.

கோரியா, ஜப்பான்தேசங்களிற்பெண்கள், கலியாணமானவர்கள், ஆகாதவர்கள், என்று அவர்கள் தலைப்பின்னலினின்று அறியலாம். இந்தியாபோன்ற கீழைநாடுகளிற் பெண்கள் உடையினின்றே இதனை அறியலாம். இளம்வயதுள்ள கலியாணமாகாதவாலிபன் கோரியாவில் வெறுந்தலையுடன் முதுகின்பின்னால் ஒருசுருட்டைமயிர் தொங்குமாறுபோவான். அவன் கலியாணம்பண்ணிக்கொண்டதும், தலைமயிர் நன்றாகக்கட்டப்பெற்றுத் தலையின்மீதேறும். தங்கள்கருப்புமயிரின் அழகும் பருமனும் குறைந்துபோகாவண்ணம் பார்த்துக்கொள்வதிற் கோரியாதேசத்தவர், இந்துதேசத்தவர்முதலியோர் ஜாக்கிரதையுள்ளவர்கள். மயிர் நிறைய இருக்கிறது என்றுகாட்டுவதற்காகப்பொய்மயிர்களைப்போன்ற சவரியை உபயோகப்படுத்துவதுண்டு. கோரியப்பெண்கள் பொய்மயிர்களை உபயோகப்படுத்திக் கட்டுகள்கட்டித் தலைமேல் ஊசிசெருகி ஜாக்ரதையாய்வைத்துக்கொள்வதுண்டு. கோரியாவில் ஏழைகள், தங்கள் தலைமயிர்களைத் தலைமுண்டாசுகட்டிக் கொள்வதுபோல், தலைமீது சுருட்டிவைத்துக்கொள்வதுமுண்டு.

வீ. சுப்ரமணியஐயர்.

தமிழ்ப்பண்டிதர்,

முனிசிபல்ஹைஸ்கூல், மாயூரம்.

புத்தகமதிப்புரை.

1. நம்முடைய கடமைகளும், ஜெர்மனியின் கொடுமையான செய்கையும்:—(ராஜநீதின்தெளிபொருட்டிபம்—2.) இச் சிறுபுத்தகம், உறந்தை கி. ராஜகோபாலன் என்பவராலெழுதப்பெற்றது. இதில் நம் சிறுவர்களும் தெரிந்துகொள்ளவேண்டிய சில அரசியல்முறைகளையும், அவற்றாலுள்ள நன்மைகளையும் விவரித்திருப்பதுடன், மாதா, பிதா, குரு, தெய்வம், அரசன் இவர்களிடத்து விசுவசிப்புடனிருக்கவேண்டுவது நமதுகடமையென்றுபோதித்திருப்பது திருப்திகரமாயிருக்கிறது. இதன்விலை அணா 2.

2. வில்லியம் எவர்ட் கிலாட்ஸ்டன் சரிதம்:—இது கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் உபாத்தியாயராயிருந்த கே. வேங்கடராமையர் பி. ஏ. அவர்களால் எழுதப்பட்டது. இது உலகப்பிரஸித்திபெற்ற கிலாட்ஸ்டன் பிரபுவினுடைய ஜீவியசரித்திரத்தின்சுருக்கமா யவரது ஒழுக்க வழக்கங்களையும், குணவிசேஷங்களையும் தமிழ்மக்கள் நன்குணருமாறு தெளிவாயெழுதப்பெற்றிருக்கிறது. இதன்விலை அணா 8.

3. பெண்கள் நீதிவிளக்க வினாவிடை:—இது மயிலாப்பூர்க் குப்புஸாமிநாயகரா லெழுதப்பட்டது. இதில் இந்தியப்பெண்மக்களுக்குரிய வொழுக்கவழக்கங்களையும் கற்புநிலைமுதலிய கடமைகளையும் பற்றிப் பிராசீனமுறையைத்தழுவி யுக்தியுக்தமாகவும், சாஸ்த்ரஸம்மதமாகவும் வினாவிடைநடையில் விளக்கி யெழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 4.

மேற்கண்டபுத்தகங்கள் வேண்டுவோர் ஆக்கியோர்க் கெழுதிப் பெறலாம்.

4. காதல்வெற்றி:—இது, வி. பி. கிருஷ்ணஸ்வாமி பி. ஏ. அவர்களால் எழுதப்பட்டதொரு சிறிய தமிழ்நாவல். இதில் ஒருபெண் தனது மனசுக்குப்பிடித்தவாலிபனை விவாகம்செய்துகொண்டதாகக் கதையைக்கற்பித்து, கணவருக்கடங்காதமனைவியரியல்பும், மனைவிகட்கடங்கிய கணவர்களியல்பும், பிறவும் வேடிக்கையா யெழுதப்பட்டுள்ளன. இதன்விலை அணா 4. ஜநாபிமானியின் சந்தாதார்களுக்கு மாத்திரம் அணா 3. வேண்டுவோர் ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3—4 கொண்டிசெட்டிதெரு, மதராஸ். என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்

விளம்பரம்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தினின்றும் மாதந்தோறும் பிரசுரமாகும் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்குப் பெரும்பான்மையும் தமிழிலக்கிய இலக்கணவிஷயங்களும், தமிழ் நாட்டுப் புராதனசரிதங்களும், சாஸனங்களும், வடமொழியினும் ஆங்கிலத்தினும் தமிழிற்கு வேண்டுவனவாகக்கருதப்படும் சாஸ்திரமொழிபெயர்ப்புகளும், ஒன்றையொன்றிகழாச்சமயக்கொள்கைகளும், தமிழின் அருமைபெருமைகளைக்காட்டும் ஆராய்ச்சிவிஷயங்களுமாகிய விஷயதானஞ்செய்வோர்க்கு, 'செந்தமிழ்'ப்பக்கம் 1-க்கு வியாஸத்துக்குத்தக்கவாறு 8 அணு முதல் 2 ரூபா வரை ஸம்பாவனை கொடுக்கப்பெறும். இந்த ஸம்பாவனை வியாசங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டுப் பிரசுரமானபிறகே எழுதியநிருபருக்கு அனுப்பலாகும். ஏற்றுக்கொள்ளப் படாத விஷயதானங்களை நிருபர்களுக்குத்திரும்பத் தேவையாயிருந்தால் அவர்கள் தபாற்செலவிலேயே அனுப்பப்பெறும்.

B. இராஜராஜேஸ்வர ஸேதுபதி,

அக்கிராசநாதிபதி,

மதுரைத்தமிழ்ச்சங்கம்.

1915-ஞ அக்டோபர்மீ 23உ காலை 9-மணிக்குநடந்த மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாஹஸபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

---

1. மாட்சிமைதங்கிய இராமநாதபுரம்ராஜா ஹிஸ் ஹைனெஸ். பா. ராஜராஜேஸ்வரசேதுபதியாகிய முத்துராமலிங்கசேதுபதியவர்கள்—அக்கிராசநாதிபதி.

2. மகா-ள-ள-ஸ்ரீ கான்பகதூர் H. அப்துல்சுபான்சாஹிப் அவர்கள்.

3. ,, R. இராகவையங்கார் அவர்கள்.

4. ,, V. S. இராமஸ்வாமிசாஸ்திரியவர்கள், B. A., B. L.

5. ,, T. N. சுந்தரராஜ ஐயங்கார் அவர்கள், B. A, B. L., (கௌரவகாரியதரிசி.)

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்:—

I. (1) மகா-ள-ள-ஸ்ரீ T. இராமஸ்வாமி ஐயங்கார் அவர்கள், தமிழ்ப்பண்டிதர், சூலூர், கோயம்புத்தூர்ஜில்லா.

(2) ,, K. சுப்பிரமணியபிள்ளை அவர்கள், M.A, Apprentice-at-law, மைலாப்பூர்.

இவர்களைச் சங்கத்தின் அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

II. 1915ஞ ஆகஸ்டு, செப்டம்பர்மாதங்களின் வரவு செலவு கணக்குகள், வாசித்து அங்கீகரிக்கலாயிற்று.

III. கல்வி அபிவிருத்திவிஷயமாய்ச் செய்யவேண்டிய காரியசம்பந்தமாகத் தொல்காப்பியச்செய்யுளியலும், பழமொழியும் இவ்வருஷம் அச்சிடும்படிக்கும், தமிழ்நாவலர்சரிதை, நீலகேசி இவற்றையும் கூடியமட்டில் அச்சிடவும் தீர்மானம்.

IV. சங்கம்கலாசாலைமாணவர்கள் படித்தபின் கலாசாலையைவிட்டு நீங்குங்காலத்தில், அவர்கள்பெற்றுக்கொண்ட புஸ்தகங்களைக் கலாசாலைத் தலைமையுபாத்தியாயரிடம் ஒப்புவித்துவிடவேண்டியதாகத் தீர்மானம்.

V. சங்கமாபீஸ் டிரெடில் மெஷீனுக்குப் புதிதாகச் சக்கரம் ஒன்று வாங்கவேண்டியவிஷயம் கமிட்டியிற்கொண்டுவரவேண்டியது அனுவசியமென்றும், பிரசிடெண்டு அவர்களும் காரியதரிசிகளும் பைசல்செய்யவேண்டியவிஷயமென்றும் தீர்மானம்.

B. RAJA RAJESWARAN,
President,
Madura Tamil Sangam.

23—10—15.